AHARAM
# அகரம்

எண்: 11 எழுத்து: 02 பெப்ரவரி - 2017 | ஜ.அல்ஊலா 1438



பொது சனநூலகம்
22 FEB 2017
மாநகரசபை
யாழ்ப்பாணம்

## 69 ஆவது சுதந்திர தினம்

# முஸ்லிம்களின் தேசத்திற்கான பங்களிப்பு

சிறுவர் பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

50/-

மாதாந்த சிறுவர் சஞ்சிகை

www.aharam.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்கணித எண்ணக்கருக்கள்

## முன்பள்ளி மாணவர்களுக்கானது



- பாடசாலையில் கணித பாடத்தை சிரமமின்றிக் கற்க
- கணிதக் கல்விக்குச் சிறந்த அத்திவாரம் இடக்கூடியவாறு
- பிள்ளைகளின் வயது முதிர்ச்சிக்கேற்ப
- விஞ்ஞான முறைப்படி
- இத்துறையில் அனுபவம் மிக்கவர்களால்
- பிள்ளைகளைக் கவரக்கூடிய நிறங்களில் தயாரிக்கப்பட்ட பயிற்சிப் புத்தகம்.




*பிரதம எழுத்தாளர்:*
***எம். அப்துல் வாஹித் B.Ed., M.Ed.***

**விலை: ரூபா 350 மட்டுமே**


**கிடைக்குமிடம்:**

தொடர்புகளுக்கு:
**0773171722**

**ISLAMIC BOOK HOUSE**
**77, Dematagoda, Road, Colombo 09, Sri Lanka.**
**Tel: 2684851, 2669197**

**Insight Institute of Management and Technology**
78, Allen Avenue, Dehiwala. www.insightedu.lk e-mail: insight.centre@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



06

ஆண் சிங்கங்களின் சராசரி ஆயுட்காலம் 12 வருடங்களும் பெண் சிங்கங்களின் சராசரி ஆயுட்காலம் 16 வருடங்களும் ஆகும். ஒரு கூட்டத்தில் வயது முதிர்ந்த ஓர் ஆண் சிங்கமே இருக்க வேண்டும் என்பதால் ராஜாவான ஆண் சிங்கம் அதன் 10 ஆவது வயதின் முடிவில் கூட்டத்திலிருந்து தனித்துச் சென்று விட வேண்டும்



22



27



32



20


AHARAM அகரம்

எண்: 11 - பெப்ரவரி : 2017 - எழுத்து: 02






ஆசிரியர்
எம். றிஸ்வி ஸுபைர்

**ஆலோசனைக் குழு**

அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச். எம். ஹஸன் M.Ed
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd

அன்பு ஜவஹர்ஷா
(ஓய்வு பெற்ற அதிபர்)

துணை ஆசிரியர்
வ. முஹம்மத் நபீல்

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்


## பாடத்திட்டம்


| | |
|---|---|
| தகவல் தொடர்பாடல் | 30 |
| சாதனையாளர் | 24 |
| அரபு மொழி | 14 |





36


**தொடர்புகளுக்கு:**

அகரம்
77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை
கொழும்பு 00900
தொ.பே : 077 741 2561
பெக்ஸ் : 011 268 6030
Web : www.aharam.lk
E.mail : aharamipc@gmail.com



**சந்தா விபரம்**

| | |
|---|---|
| தனிப் பிரதி | : 50/= |
| 1 வருட சந்தா | : 800/= |
| 6 மாத சந்தா | : 400/= |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றியோர் எலும்புகள் உடைந்து நொறுங்குமளவு பிரசவ வலி. ஆனால், எமது முகத்தை முதன் முதலாகக் காணும் தருணம் அந்த அத்தனை வலிகளையும் முற்றாக மறந்துவிட்டு இணையற்ற இன்பத்தில் மூழ்கி விடுகிறாள் எமது தாய்.

நாம் வயிற்றில் வலமும் இடமுமாக புரண்டு அவள் தூக்கத்தை கெடுக்கும்போது அவள் துளியளவு கூட கோபப்படவில்லை. அவள் விரும்பியதை சாப்பிட முடியாமல் தவித்தபோதும் அவள் கவலைப்படவில்லை. பிரசவ வலியில் உயிர் துகள் துகளாக கருகி மரணத்தின் வாசலில் கதறும்போதும் எம் முகத்தைக் காணும் நொடிக்காகவே பொறுமையுடன் காத்திருந்தாள். எமது முகத்தைக் கண்டபோது அத்தனை வலிகளையும் மறந்துதானே இந்த உலகில் மகாராணிபோல பெருமை கொண்டாள்.

தாயின் இணையற்ற இன்பத்திற்குச் சமனாக இன்னோர் இன்பம் இருக்குமென்றால் அது அந்த மகனை, மகளை இந்த உலகம் சான்றோர் எனப் போற்றும் தருணமாகும்.

நமது தாய்மாருக்கு நம்மைப் பற்றிய ஏகப்பட்ட கனவுகள் நிறைந்திருக்கின்றன. நமது ஒவ்வொரு கட்ட வளர்ச்சியையும் தொட்டு, ரசித்து பரவசப்பட்ட அவள் எமது எதிர்காலம் பற்றி ஆயிரம் கனவுகளை தன் மனதில் சேகரித்து வைத்திருப்பாள். அந்தக் கனவுகள் ஒவ்வொன்றும் அரங்கேறுகையில் சிறகின்றி வானில் பறப்பாள்.

தாய் எவ்வளவு அழகிய அற்புதம். அவளை மகிழ்விக்க நாம் மாட மாளிகையில் உட்கார வைத்து தங்கத் தண்ணீரால் அவள் கால்களைக் கழுவத் தேவையில்லை. அதை அவள் எதிர்பார்ப்பதும் இல்லை. அவளது அகத்தை குளிர்விக்க, அவளது மனம் நீண்ட காலமாய் சேகரிக்கும் சின்னச் சின்ன ஆசைகளை தாம் நிறைவேற்றல் போதுமானது.

எமது தாயின்...

இந்த உலகத்திற்கு எம்மை அடங்கா பெருமையுடன் அழைத்து வந்தவளின்

எமது சுவனத்தை தனது காலடியில் பத்திரப்படுத்தி வைத்திருப்பவளின்

ஆசைகளை நிறைவேற்றுவதை விட பெரிய பாக்கியம் வேறு ஏதாவது இந்த உலகில் உள்ளதா?

எம்மைப் பற்றி நமது ஆசிரியர்கள் அவளிடம் பெருமையாக பேசும்போது அவளது கண்களில் பிரகாசிக்கும் இன்பத்தை எப்போதாவது கவனித்திருக்கிறீர்களா? நாம் மேடையில் ஏறி இரு கைகளாலும் பரிசை வாங்கும் நொடிகளில் அவள் உச்சி குளிர, உள்ளம் நெகிழ, உடல் பரபரக்க அவள் தன்னை மறந்து தள்ளாடுவதை கவனித்திருக்கிறீர்களா...?

அவளுக்கு இதுதான் வேண்டும்! அந்த ஆனந்தம்தான் வேண்டும்! தன் மகன் சான்றோனாக, ஒழுக்க சீலனாக, வெற்றியாளனாக வலம் வருவதை அவள் இருவிழிகள் நிறைய கண்ணார காண வேண்டும்.

எமக்கான எம்முயிர்த்தாயை எமது பண்பாட்டாலும் பல துறை வெற்றிகளாலும் குளிர வைப்போமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹதீஸ் பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜித் (இஸ்லாஹி)

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபுஹுறைரா (ழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ''ஒரு மனிதர் ஓர் இடத்தில் அமர்ந்திருந்து, அவ்விடத்தில் அல்லாஹ்வை நினைவுபடுத்தவில்லையானால், அவருக்கு அல்லாஹ்விடமிருந்து இழப்பு ஏற்படுகின்றது. மேலும், அல்லாஹ்வை நினைவுபடுத்தாமல் ஒருவர் தூங்கினால் அவருக்கும் அல்லாஹ்விடமிருந்து இழப்பு ஏற்படுகின்றது.'' (அபுதாவுத்)

அல்லாஹ்வை நினைவுபடுத்துவது மனிதனை பாவ காரியங்களிலிருந்து தடுக்கின்றது. அத்துடன், அல்குர்ஆனின் பார்வையிலும் நன்மைகளை பெற்றுத் தருகின்ற ஒரு செயலாகவுமுள்ளது.

அல்லாஹ்வை அதிகம் நினைவுகூரக் கூடிய ஆண்கள்-பெண்கள் யாரோ அவர்களுக்கு மன்னிப்பையும் மகத்தான கூலியையும் அல்லாஹ் தயார் செய்து வைத்துள்ளான். *(33:35)*

''ஆகவே, என்னை நீங்கள் நினைவுகூருங்கள். நானும் உங்களை நினைவுகூருவேன். நீங்கள் எனக்கு நன்றி செலுத்துங்கள். இன்னும் எனக்கு மாறு செய்யாதீர்கள்.'' *(02:152)*

தூக்கம் மாத்திரமன்றி, அல்லாஹ்வை நினைவு கூராமல், அவன் பெயர் கொண்டு ஆரம்பிக்காமல் எந்தவொரு விடயத்தைச் செய்தாலும், அங்கு சைத்தானின் ஆதிக்கம் மிகைத்து விடும். சைத்தானின் வலையில் ஒருவன் சிக்கி விட்டால் அவன் நன்மைகளின் வாயிலை விட்டும் தூரமாகி விடுகிறான்.

எனவேதான், தூக்கத்திலும் சைத்தான் மனிதனை நெருங்காதிருக்க நபியவர்கள் அல்லாஹ்வை நினைவுகூர வழிகாட்டினார்கள். தூங்கும் முன் அல்லாஹ்வை நினைவுபடுத்துவதற்கான இலகுவான வழிமுறையாக நபியவர்கள் தூங்கும்போது ஓதுவதற்கு கற்றுத் தந்துள்ள அனைத்து துஆக்களும் தஸ்பீஹ்களும் காணப்படுகின்றன.

அல்லாஹ்வை நினைவுபடுத்தி அவனது பெயர் சொல்லி நாம் தூங்காதபோது எமது தூங்கும் பெரும் நேரம் நன்மைகள் எதனையும் பெற்றுத் தராமல் வீணாக கழிவதுடன் அல்லாஹ்வின் பாதுகாப்பில் இருந்தும் தூரமாகி விடுகிறோம் இது எமக்கு பாரிய இழப்பே.

மேலும், இஷாத் தொழுகையின் பின்னர் அதிக நேரம் கண் விழித்து வீணான விடயங்களை பேசிக் கொண்டிருந்து நேரத்தை வீணடிப்பதையும் நபியவர்கள் தடுத்ததுடன் முக்கியமான தேவைகளை செய்து முடித்ததும் உடன் தூக்கத்திற்குச் செல்ல வழிகாட்டியுள்ளதை இமாம் புகாரி அவர்கள் பதிவு செய்துள்ளார்கள்.

நேர காலத்துடன் தூக்கத்திற்குச் செல்வது சுபஹ் தொழுகைக்கு உற்சாகத்துடன் எழும்புவதற்கு உதவியாய் அமையும்.

அத்துடன், தூங்கும் சந்தர்ப்பத்தில் அன்றைய தினத்தில் தான் செய்த செயற்பாடுகள் தொடர்பாக சுய விசாரணை செய்து கொள்தல் வேண்டும். குறித்த தினத்தில் செய்த நல்லவற்றுக்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்திக் கொள்வதும் தவறுகளுக்காக அல்லாஹ்விடத்தில் பாவ மன்னிப்புத் தேடிக் கொள்வதும் சுய விசாரணையின் பிரதான அம்சங்கள்.

தூக்கத்தின்போது கெட்ட கனவுகள் கண்டால் இடது பக்கம் மூன்று தடவைகள் துப்பி விட்டு 'அஊது பில்லாஹி மினஸ் சைத்தானிர் ரஜீம்' என சைத்தானின் தீங்குகளிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடிக் கொள்தல். இவ்வாறு செய்வதனால் சைத்தானுடைய எந்தவோர் இடைஞ்சலும் ஏற்படாது மன நிறைவான தூக்கத்தை அனுபவிக்கலாம்.


மனித விரோதியான சைத்தான் மனிதனைத் தீண்டாதிருக்க நபியவர்கள் காட்டித் தந்துள்ள மிக முக்கியமான விடயமே அல்லாஹ்வின் பெயர் சொல்லி, அவனை நினைவுபடுத்தி தூக்கத்தை ஆரம்பிப்பதாகும்.

எனவே, எம் வாழ்வின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இஸ்லாம் காட்டித் தந்துள்ள வழிகாட்டல்களின் பிரகாரம் எம் வாழ்வை அமைத்து, எப்போதும் இறை நினைவுடன் கூடிய வாழ்வை கடைப்பிடிப்போம்.

தூக்கத்தின் ஒழுங்குகளை எம் வாழ்வில் கடைப்பிடிப்பது கொண்டு நாம் தூங்கும் நேரத்தையும் நன்மைகள் பெற்றுத் தரக் கூடிய பயனுள்ள ஒன்றாக மாற்றிக் கொள்ள முயல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆங்கிலத்தில்: ஸனீயாஸ்னைன் கான் (இந்தியா)
தமிழில்: ஹஸன் இக்பால், யாழ்ப்பாணம்

குர்ஆனிய களஞ்சியம்

தொடர் 18

# அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள மிருகங்களும் பறவைகளும் (பகுதி 2)



## கழுதை

புராதன காலந்தொட்டே பொதி சுமப்பதிலும் பொருட்களை இடமாற்றுவதிலும் கழுதைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. குர்ஆனிய போதனைகளில் பல இடங்களில் கழுதை உவமானமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. நபி உஸைர் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் கழுதை மேல் சவாரி செய்து கொண்டிருந்தபோது அவருக்கு அற்புதம் காட்டப்பட்டதாகவும் அதன் பின்னர் அவரின் ஈமான் அதிகரித்ததாகவும் அல்லாஹ் குர்ஆனில் கூறுகின்றான். மேலும் லுக்மான் அவர்கள் தனது மகனுக்கு அறிவுரை கூறும்போது, ''பணிவாக நடந்து கொள். கழுதையின் கனைத்தல் போன்றல்லாது குரலைத் தாழ்த்திப் பேசு'' என்று எச்சரித்ததாக குர்ஆன் குறிப்பிடுகிறது. அல்லாஹ்வின் வழிகாட்டலை கற்றுணர்ந்து அதன்படி செயற்படாதவர்களை அல்லாஹ் பொதி சுமக்கும் கழுதைகளுக்கு ஒப்பிடுகிறான்.

## காகம்


ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் இரு புதல்வர்கள் பற்றிய சம்பவத்தினை குர்ஆன் விவரிக்கும்போது தங்களுக்கிடையிலான கைகலப்பை அடுத்து இளைய சகோதரனை கோப மிகுதியில் கொலை செய்து விட்டு பின்பு தன்னையே நொந்து கொண்ட மூத்த சகோதரன் கொலையுண்ட சடலத்தை என்ன செய்வதென்று அறியாது திகைத்து நின்றதாகவும் அப்போது அல்லாஹ் காகமொன்றை அனுப்பி சடலங்களை மண்ணில் புதைக்கும் வழிமுறையை கற்றுக் கொடுத்ததாகவும் எடுத்துக் காட்டப்படுகின்றது. தனது இயலாமையை உணர்ந்த மூத்த சகோதரன் காபில், ''அந்தோ! நான் இந்த காகத்தைப் போல் கூட இல்லாதாகி விட்டேனே! அப்படி இருந்திருந்தால் என் சகோதரனுடைய பிரேதத்தை நான் மறைத்திருப்பேனே! என்று கூறி கைசேதப்படக் கூடியவராகி விட்டார்.'' (ஸூரா மாயிதா 5:31)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காடை பறவை



மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களும் பனூ இஸ்ரவேல் கூட்டத்தினரும் எகிப்திலிருந்து புனித பூமி நோக்கி இடம்பெயர்கின்றபோது அல்லாஹ் அவர்களுக்கு ''மன்னா'' எனும் இனிப்பின் திரவத்தையும் காடை பறவையின் மாமிசத்தையும் உணவாக அனுப்பியதாக அல்குர்ஆன் கூறுகின்றது. உணவுக்காக அலைந்து திரிந்து துன்பப்படுவதில் இருந்து அக்கூட்டத்தினரை காப்பாற்றுவதற்காகவே அல்லாஹ் இம்மாபெரும் அருளை அவர்கள் மீது சொரிந்தான். இருப்பினும் பனூ இஸ்ரவேல் கூட்டத்தினர் நன்றி கெட்ட கூட்டத்தினராகவே இருந்தனர். அல்லாஹ்வின் அருளை அனுபவித்தவர்கள் அதற்காக சிறிதேனும் நன்றி செலுத்த முற்படவில்லை. மாறாக, அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட அந்த விசேட உணவு சலித்துப் போய் விட்டதாகவும் வேறுபட்ட பல்வேறு வகை அறுசுவை உணவுகள் வேண்டுமெனவும் குறை கூறிக் கொண்டிருந்தனர்.

## ஓநாய்



ஓநாய் மிக தந்திரம் வாய்ந்ததொரு மிருகம். காட்டு விலங்குகளை வேட்டையாடி உண்ணும் ஊன் உண்ணி விலங்காகிய இது மனிதர்களை குறிப்பாக, சிறுவர்களை வேட்டையாடக் கூடியது. யூஸுப் (அலை) அவர்களைப் பற்றிய வரலாற்று சம்பவத்தை அல்குர்ஆன் எடுத்துரைக்கும்போது யூஸுப் மீது பொறாமை கொண்ட அவரது 10 சகோதரர்களும் யூஸுபை பாழடைந்த கிணற்றினுள் வீசி விட்டு ஓநாய் கடித்து தின்றுவிட்டதாக தமது தந்தையிடம் பொய் கூறினர். இரத்தக் கறை படிந்த ஆடையொன்றையும் போலியான ஆதாரமாகக் காட்டினர்.


## யானை

பருமனான உடலமைப்பும் பலமும் வாய்ந்த விலங்குகளான யானைகள் அக்காலத்தில் போர்ப் படைகளில் முக்கிய இடம்பெற்றிருந்தன. இறைத் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் பிறப்புக்கு முன் கஃபாவை அழித்தொழிக்கும் நோக்குடன் யெமன் தேசத்து அரசன் ஆப்ரஹா என்பவன் யானைப் படையுடன் மக்கா நோக்கி படையெடுத்து வந்தான். ஆனால், அப்படை மக்கா வந்தடைவதற்கு முன்னரே அல்லாஹ் பறவைக் கூட்டம் ஒன்றை அனுப்பி அழித்து விட்டான். அதன் பின்னர் அரசன் ஆப்ரஹா நாடு திரும்பி பிணியில் வீழ்ந்து இறந்து போனதாக அல்குர்ஆன் கூறுகிறது. (ஸூரா அல் பில் - 05)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலிப் அலி (இஸ்லாஹி)
www.aliaalif.tk / aalifali@gmail.com

# காட்டு ராஜா சிங்கம்

நூறைத் தொட்டு விட்டேன், அல்ஹம்துலில்லாஹ்.

அல்லாஹ்வின் அற்புதப் படைப்புக்கள் கட்டுரைத் தொடரில் இது நூறாவது கட்டுரை. நூறாவது தொடரில் காட்டு ராஜா சிங்கத்துடன் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். தொடர்ந்து எட்டு வருடங்களாக அகரம் சஞ்சிகையில் பல தலைப்புக்களில் எழுதி வருகின்றேன். இதற்கு அருள் புரிந்த வல்ல ரஹ்மானுக்கே புகழ் அனைத்தும், அல்ஹம்துலில்லாஹ். தொடர்ந்தும் எனது ஆக்கங்களை வாசித்து வருகின்ற தம்பி தங்கைகளுக்கும் ஆலோசனைகள் கூறி என்னை உற்சாகமூட்டுகின்ற சகோதர சகோதரிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். அடிக்கடி என்னைத் தொடர்பு கொண்டு ஞாபகமூட்டி கட்டுரைகளை எழுதத் தூண்டி அவற்றை வடிவமைத்து வெளியிடுவதில் அயராது உழைக்கும் அகரம் சஞ்சிகை ஆசிரியர் குழாத்திற்கும் நிர்வாகத்திற்கும் எனது உளப்பூர்வமான நன்றிகள் உரித்தாகட்டும், ஜஸாகுமுல்லாஹு கைரன்.


இனி வரும் காலங்களிலும் தொடர்ந்தும் இன்ஷா அல்லாஹ் பல்வேறு தலைப்புக்களில் அல்லாஹ்வின் படைப்பினங்களில் உள்ள அற்புதங்களைத் தேடி எழுத வேண்டுமென அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றேன். நீங்களும் மறவாமல் உங்கள் பிரார்த்தனைகளில் என்னையும் சேர்த்துக் கொள்ளுங்கள். அகரம் சஞ்சிகையில் வெளியாகிய எனது ஆக்கங்களைத் தொகுத்து படைப்பினங்களில் படைப்பாளனின் கைவண்ணம் என்ற தலைப்பில் ஒரு புத்தகத்தையும் வெளியிட்டுள்ளேன். மீண்டுமொரு புத்தகம் வெகு விரைவில் உங்கள் கரம் கிட்டும், இன்ஷா அல்லாஹ்.

### காட்டுக்கு ராஜா

சிங்கம் பாலூட்டி வகையைச் சேர்ந்த ஒரு காட்டு விலங்கு. இது காட்டுக்கு ராஜா என்றும் சொல்லப்படுகின்றது. பாடல்களிலும் இலக்கியங்களிலும் கதைகளிலும் கூட சிங்கம் காட்டு ராஜா என வர்ணிக்கப்பட்டுள்ளது. **Simba: THE LION KING** என்ற பெயரில் ஒரு பிரபலமான கார்ட்டூனும் இருக்கின்றது. எமது நாட்டு தேசியக் கொடியிலும் வாளேந்தியவாறு ஒரு சிங்கம்தான் நிற்கின்றது. பண்டைய நாகரிகங்கள் தொட்டு வீரத்திற்கும் விவேகத்திற்கும் எடுத்துக் காட்டாக சிங்கம் உவமானப்படுத்தப்பட்டு வந்திருப்பது ஒரு சிறப்பம்சமாகும். இதற்கு முக்கியமான சில காரணங்கள் உண்டு. அவற்றைப் பின்னாலுள்ள பந்திகளில் பார்ப்போம்.

### சிங்கத்தின் உடலமைப்பு

சிங்கத்தைக் கண்டிராத யாரும் இருக்க மாட்டீர்கள். புத்தகங்களிலும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் மிருகக்காட்சி சாலையிலும் நிச்சயமாக நீங்கள் சிங்கங்களைக் கண்டிருப்பீர்கள். பூனை இனத்தைச் சார்ந்ததுதான் சிங்கம். பூனை இனத்து விலங்குகளில் புலிக்கு அடுத்ததாக பெரியது சிங்கம்தான். நாம் புகைப்படங்களிலும் தொலைக்காட்சிகளிலும் பார்த்திருப்பதை விடவும் பெரியவைதான் இவை. ஆண் சிங்கமானது பெண் சிங்கத்தை விடவும் பெரியது. பெரிய தலையும் அடர்த்தியான பிடரி மயிரும் இவற்றுக்கு உண்டு. இந்தப் பிடரி மயிர்தான் அவற்றுக்கு மிடுக்கையும் அழகையும் கம்பீரத்தையும் கொடுக்கின்றது. பெண் சிங்கத்திற்கு பிடரி மயிர் இருக்காது. ஆண் சிங்கத்தை விட சிறிதாக இருக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சிங்கத்திற்கு பலமான நான்கு கால்களும் கால் பாதங்கள் ஒவ்வொன்றிலும் கூர்மையான ஐந்து ஐந்து நகங்களும் பக்குவமாக மறைந்திருக்கும். பாதங்கள் பஞ்சு போன்று மென்மையாக இருக்கும். நிலத்தைத் தொடும் நீண்ட வாலும் வாலின் நுனியில் தூரிகை போன்று கொஞ்சம் மயிரும் இருக்கும். ஆண் சிங்கம் 150-250 கிலோ வரை எடை கொண்டதாகவும் பெண் சிங்கம் 120-150 கிலோ எடை கொண்டதாகவும் இருக்கும். சிங்கங்களின் கர்ஜனையின்போது வரும் ஒலியின் அலைவரிசை பலமானது. இதனைத் தாங்க முடியாத ஏனைய விலங்குகள் சிங்க கர்ஜனைக்குப் பயந்து பின்வாங்கிச் சென்று விடும். சிங்கமொன்றின் கர்ஜனை எட்டு கிலோ மீற்றர்களுக்கு அப்பால் இருக்கும் வேறு ஒரு சிங்கத்தினால் கேட்க முடிகின்ற அளவு பலமாக இருக்கும்.

### எல்லைப்படுத்தப்பட்ட வாழிடம்

அமெரிக்கா, ஆபிரிக்கா, இந்தியா, சீனா போன்ற நாடுகளில் சிங்கங்கள் அதிகமாக வாழ்கின்றன. எமது இலங்கை நாட்டிலும் விலங்கியல் சரணாலயங்களில் சிங்கங்கள் வளர்க்கப்படுகின்றன. பொதுவாக, இவை அடர்ந்த காடுகளை விரும்பாமல் அடர்த்தி குறைந்த இலையுதிர்க் காடுகளில் வாழ்வதையே விரும்புகின்றன. கூட்டமாக சேர்ந்து வாழும் இயல்பு கொண்ட சிங்கங்களில் ஆண் சிங்கங்கள் தன் கூட்டத்துக்கு என்று ஒரு எல்லையை உருவாக்கி வைத்துக் கொள்ளும். அவ்வெல்லையைச் சுற்றி மலம், சிறுநீர் கழிப்பதன் மூலமும் நகத்தால் மரங்களில் கீறியும் அதனை அடையாளப்படுத்தும். எனவே, வேறு சிங்கங்கள் இந்த எல்லைக்குள் ஊடுருவுவதில்லை. மீறி வந்தால் அதனைக் கடித்து, மிரட்டி, விரட்டியடித்து விடும்.

### அன்பான கூட்டு வாழ்க்கை

மற்றைய விலங்குகள் போலல்லாது சிங்கங்கள் கூட்டு வாழ்க்கை வாழும் குணமுடையன. ஒரு கூட்டத்தில் நான்கு முதல் ஆறு வரையான பெண் சிங்கங்களும் ஒரு முதிர்ந்த ஆண் சிங்கமும் இன்னும் சில சிங்கக் குட்டிகளும் இருக்கும். ஆண் சிங்கமே அரசாளும். பெண் சிங்கங்கள் எப்படியும் இரத்த உறவுகளாகவே இருக்கும். இவற்றுக்குள் ஒவ்வொன்றும் மற்றொன்றுடன் அன்பாக நடந்து கொள்ளும். குட்டிகளுடன் விளையாடுவதும் கூட்டமாக காட்டைச் சுற்றிப் பார்க்கப் போவதும் கூட்டமாக வேட்டைக்குச் செல்வதும் நீரருந்தச் செல்வதும் உறங்குவதும் இவற்றின் கூட்டுப் பண்பைக் காட்டுகின்றன. அனைத்து உறுப்பினர் களும் ஆண் சிங்கத்திற்குக் கட்டுப்பட்டே நடக்கும்.

ஆண் சிங்கங்களின் சராசரி ஆயுட்காலம் 12 வருடங்களும் பெண் சிங்கங்களின் சராசரி ஆயுட் காலம் 16 வருடங்களும் ஆகும். ஒரு கூட்டத்தில் வயது முதிர்ந்த ஓர் ஆண் சிங்கமே இருக்க வேண்டும் என்பதால் ராஜாவான ஆண் சிங்கம் அதன் 10 ஆவது வயதின் முடிவில் கூட்டத்திலிருந்து தனித்துச் சென்று விட வேண்டும். அதற்கு அடுத்ததாக உள்ள ஆண் சிங்கம் அந்த இடத்தை நிரப்பி முடிசூடும். அவ்வாறு அதுவாகச் செல்லவில்லை என்றால் அடுத்து முடிசூட வேண்டிய இளம் ஆண் சிங்கம் பெரிய சிங்கத்தை அடித்து விரட்டி விட்டு அந்த இடத்தை எடுத்துக் கொள்ளும். இவ்வாறு செய்வதன் நோக்கம் 10 வருடங்களை எய்தும் ஆண் சிங்கம் நலிவுற்று வயது முதிர்ச்சியடைய ஆரம்பிப்பதால் தனது கூட்டத்தைக் காப்பாற்ற முடியாத நிலைக்கு ஆளாகும். எனவே, அந்தப் பொறுப்பை அதன் பின் உள்ள ஆண் சிங்கம் பொறுப்பேற்க நிர்ப்பந்திக்கப் படுகின்றது.

கூட்டத்திலிருந்து துரத்தப்படும் கிழட்டு சிங்கத் தால் சுயமாக வேட்டையாட முடியாத அளவு நலிவுற்று விடும். வேட்டைப் பற்கள் கூர்மையிழந்து, நகங்கள் பலமிழந்து, மெலிந்து உருக்குலைந்து அப்படியே இறந்து விடும். சிலபோது வேறு விலங்குகளால் தாக்கப்பட்டும் இறந்து விடும். ஆனால், பெண் சிங்கம் வயது முதிர்ச்சி அடைந் தாலும் கூட்டத்தில் ஒன்றாகவே இருக்கும்.


### சிங்க வேட்டை

சிங்கங்களின் வேட்டை உண்மையிலேயே சுவாரஷ்யமானது. சிங்கங்கள் வேட்டையாடி உண்பதில் வல்லவை. அநேகமாக வேட்டையாடுவது பெண் சிங்கங்கள்தான். ஆண் சிங்கங்கள் இலகுவில் வேட்டைக்குச் செல்லாது. பெண் சிங்கம் கொண்டு வரும் உணவை உண்டு விட்டு கொட்டாவி விட்டு உறங்கிக் கொண்டிருக்கும். ஒரு மாட்டையோ மானையோ வேட்டையாட மூன்று, நான்கு பெண் சிங்கங்கள் ஒன்று சேரும். இதுவே ஆண் சிங்கம் என்றால் அது மட்டுமே களத்தில் இறங்கும். ஆண் சிங்கங்கள் வேட்டைக்குச் செல்வது அரிது. அப் படியே சென்றாலும் தனித்துத்தான் வேட்டை யாடும். வேட்டையாடியதை குடும்பத்துடன் பங்கு போட்டுக் கொள்ளும்.



சிறுவர் பகுதி
யாழ்ப்பாணம் பொது நூலகம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**பசித்தால் மட்டுமே வேட்டையாடும்**

சிங்கங்கள் பசித்தால் மட்டும்தான் வேட்டையாடும். ஒரு வேட்டையில் நன்கு உண்ட சிங்கங்கள் சில நாட்களுக்கு வேட்டையாடுவதில்லை. பசி இல்லாதபோது எந்த விலங்குகள் கண்ணில் பட்டாலும் பக்கத்தில் வந்தாலும் அவற்றை வேட்டையாடாது. இது சிங்கத்திடம் இருக்கும் ஒரு விசேட பண்பு. ஆனால், பொதுவாக ஏனைய வேட்டை விலங்குகள் அப்படியல்ல. பசி இருந்தாலும் இல்லாவிட்டாலும் எதிரில் உள்ள, கண்ணில் பட்ட விலங்குகளை எல்லாம் வேட்டையாடும். சில மிருகங்கள் விளையாட்டுக்கும் வேட்டையாடி அநியாயமாகக் கொன்று விடும்.

**பெரிய விலங்குகளைத்தான் வேட்டையாடும்**

சிங்கம் பசியெடுத்தால் இரை இருக்கும் இடத்தைத் தேடிச் செல்லும். யானை, ஒட்டகச் சிவிங்கி, குதிரை, வரிக் குதிரை, மாடு, மான், மரை, பன்றி என பெரிய இரைகளைத்தான் தேடும். முயல், எலி போன்ற சிறிய விலங்குகளை அது வேட்டையாடாது. இரைகள் கூட்டமாக இருக்கும் இடத்தை அணுகியதும் தமது உடலை வேட்டைக்குத் தயார் படுத்தும். சிங்கத்தின் உடல் நிறம் அதன் சூழலின் நிறத்திற்கு இசைவாக இருப்பதால் புதர்களுக்குள் ஒளிந்திருக்கும் சிங்கத்தை ஏனைய விலங்குகளால் அடையாளம் காண்பது கடினம். பஞ்சு போன்ற தமது பாதங்களை மெதுவாக அடி வைத்து முன்னேறும். தமது காதுகளை அங்கும் இங்கும் திருப்பி சப்தங்களை உணர்ந்து தயாராகும். வாலை வலமும் இடமும் பூனைகளைப் போன்று அசைத்துக் கொண்டு குறி பார்க்கும். கூர்மையான கண் பார்வை, அபார மோப்ப சக்தி என அனைத்து ஆற்றல்களையும் ஒருங்கே சேர்த்து எதிர்பாராத விதத்தில், எதிர்பாராத நேரத்தில் வேட்டை விலங்கை விரட்டிப் பிடிக்க புதருக்குள் இருந்து பாய்ந்து ஓடும்.

சிங்கத்தின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் அந்த உயிர் சிங்கத்திடம் மாட்டிக் கொள்ளும். கூர்மையான நீண்ட நகங்களை இரையின் உடல் தசைகளில் செலுத்தி அசைய முடியாத வண்ணம் கொக்கி போன்று கொளுவிப் பிடித்துக் கொள்ளும். பின்பு தமது கூர்மையான வேட்டைப் பற்களைப் பயன்படுத்தி குரல்வளையை நசுக்கிக் கடித்து அந்த விலங்கைக் கொன்று விடும். அதன் பின்புதான் இரையை ருசி பார்க்க ஆரம்பிக்கும். தனது குடும்பத்தில் உள்ள பெண் சிங்கங்களும் சிங்கக் குட்டிகளும் வந்து சேர்ந்து உணவு உண்ணும். அனைவரும் உண்டதன் பின்பு மிச்சத்தை அப்படியோ போட்டு விட்டு சென்று விடும்.

**புதிய இறைச்சியைத்தான் உண்ணும்**

மற்றைய வேட்டை விலங்குகள் குறிப்பாக, சிறுத்தை, புலி மற்றும் ஹயீனா எனும் சிறுத்தைப் புலி என்பன விலங்குளை வேட்டையாடினால் உண்டு விட்டு எஞ்சியதை அப்படியே போட்டு விட்டுச் செல்லாது. அவற்றைத் தம் இரும்பிடத்திற்கு இழுத்துச் சென்று பாதுகாத்து வைத்து உண்ணும். ஆனால், சேமித்து வைத்து, பழையதை உண்ணும் பழக்கம் சிங்கங்களிடம் இல்லை. வேட்டையில் உண்டவை போக மிச்சத்தை அப்படியே போட்டு விட்டுச் சென்று விடும். அதனால்தான் சிங்க வேட்டை நடந்தால் மற்றைய விலங்குகள் தமக்கு விருந்து கிடைக்கும் என்பதை எதிர்பார்த்திருக்கும். சிங்கம் பசித்தால் மட்டுமே வேட்டையாடும். தாம் வேட்டையாடியதை மட்டுமே உண்ணும். ஏனைய விலங்குகள் உண்டு எஞ்சிய எச்சங்களை அது உண்ணாது. பிரஷ்ஷாகத்தான் உண்ணும்.

**அல்குர்ஆனில் சிங்கம்**

மேற்கூறியவாறு பல்வேறு சிறப்பியல்புகளைக் கொண்டிருப்பதால்தான் சிங்கம் காட்டின் ராஜாவாக மதிக்கப்படுகின்றது. மற்றைய விலங்கினங்களிடம் இல்லாத வித்தியாசமான தனிச் சிறப்புவாய்ந்த பண்புகள் சிங்கத்திடம் இருக்கின்றது. திருமறையிலும் அல்லாஹ் (74:51) நல்லுபதேசங்களைக் காதில் வாங்காது புறக்கணிப்பவர்களை சிங்கத்தைக் கண்டு வெருண்டோடும் கழுதைகளுக்கு ஒப்பிடுகின்றான். இவ்விடத்தில் ஏனைய வேட்டை விலங்குகளைப் பற்றிக் குறிப்பிடாமல் சிங்கத்தைக் குறிப்பிட்டிருப்பது அதன் தனிச் சிறப்பைக் குறிக்க விழைவதாகத் தோன்றுகின்றது. சிங்கம் அல்லாஹ்வின் மற்றுமோர் அற்புதமான படைப்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய வரலாற்றுக் கதைகள்

ஒருநாள் பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) தமது தோழர்களுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒருவன் பெருமானாரிடம் வந்து, ''பெருமானாரே ஓர் அற்புதச் சம்பவம்'' என்று கூறினார்.

பெருமானார் தாம் அச்சம்பவத்தை அறிய விரும்பும் தோரணையில் அவனைப் பார்த்தார்கள்.

# காருண்யம்

எம்.ஏ. ரஹ்மான்



''நான் ஒரு புதரைத் தாண்டி நடக்கையில், ஏதோ கீச்சிடுவது போல குரல் கேட்டது. நான் எட்டிப் பார்த்தேன். அங்கு இரண்டு புறாக் குஞ்சுகள் இருக்கக் கண்டேன். அவற்றைப் பிடித்து என் மேலங்கியில் வைத்துக் கொண்டு என் பயணத்தைத் தொடர்ந்தேன். அப்பொழுது தாய்ப் புறா வந்து கூட்டிலே குஞ்சுகளைக் காணாது அழுகுரல் எழுப்பித் தத்தளிக்கத் தொடங்கியது. நான் என் மேலங்கியைத் திறந்து காட்டினேன். என்ன ஆச்சரியம்! தாய்ப் புறா என் மேலங்கிக்கு வந்து குஞ்சுகளை அரவணைத்துக் கொண்டது. அவை எல்லாம் என்னுடைய மேலங்கியில் இப்பொழுதும் இருக்கின்றன. நீங்களே பாருங்கள்!'' இவ்வாறு கூறியபடி தன் மேலங்கியைத் திறந்து பெருமானாருக்கு முன்னால் வைத்தான்.

அந்தப் பறவைகளைப் பார்த்ததும், ''உடனேயே போய் இவற்றைக் கூட்டில் விட்டு விடு'' என்று பெருமானார் அவனுக்குக் கூறினார்கள். இதைக் கூறி முடித்ததும், சடுதியாக மௌனத்தில் ஆழ்ந்தார்கள். சிறிது நேரம் கழிந்ததும், தமது தோழர்களைப் பார்த்துக் கண்ணீரிலே குழைந்த குரலிலே பின்வருமாறு கூறினார்கள்:

''ஓர் அன்னையின் அன்பு அளவு கடந்தது. தன் குஞ்சுகள் மீது எத்தகைய நெஞ்சு முட்டிய அன்பினை அத்தாய்ப் பறவை வைத்துள்ளது! ஆனாலும், என் தோழர்களே! அல்லாஹ் தன்னுடைய படைப்புக்களின் மீது கொண்டுள்ள மகத்தான காருண்யம் எல்லையற்றது.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## நான்கு வகை மனிதர்கள்

நாட்டுப்புற அரபி ஒருவர் ஒரு முறை கலீல் இப்னு அஹ்மதிடம் வந்து, ''மனிதர்கள் எத்தனை வகைப்படுவர்?'' என வினவியதற்கு, ''மனிதர்கள் நான்கு வகைப்படுவர்'' என பதிலளித்தார்கள்.

முதலாம் வகை - விடயங்கள் அறிந்த விபரமான மனிதர். அவர் தான் அறிந்தவனாக இருக்கின்றேன் என்பதை அறிந்தே இருக்கிறார். அவரை விட்டு விடுங்கள்.

இரண்டாம் வகை - விடயங்களை அறிந்த விபரமான மனிதர். ஆனால், தான் அறிந்தவனாக இருக்கிறேன் என்பதை அறியாதவராக இருக்கிறார். அவரோ மறந்தவராக இருக்கிறார். எனவே, அவருக்கு ஞாபகமூட்டுங்கள்.

மூன்றாம் வகை - விடயங்களை அறியாத மனிதர். அவர் தான் அறியாதவனாக இருக்கின்றேன் என்பதை அறிந்தே இருக்கிறார். அவர் நல்வழி காட்டுமாறு கேட்கிறார். எனவே, அவருக்கு கற்றுக் கொடுங்கள்.

நான்காம் வகை - விடயங்களை அறியாத மனிதர். ஆனால், அவர் தான் அறியாதவனாக இருக்கின்றேன் என்பதை அறியாதவராகவே இருக்கிறார். இவரே மிகப் பெரும் ஆபத்தானவரும் உச்சகட்ட அறிவீனருமாவர். எனவே, அவரது கருத்துக்களை மறுத்து விடுங்கள்.

✎ **பர்ஹானா நௌபர்**
**சுமையா மகளிர் அ.க.**
**கிண்ணியா - 04**

## 24 மணி நேரத்தில்

- நமது இதயம் 1,03 ,689 முறை துடிக்கிறது.
- நமது இரத்தம் 26,88,000 km செல்கிறது.
- நமது நகம் 0.00115 cm வளர்கிறது.
- நமது உரோமம் 0.04285 cm வளர்கின்றது.
- நமது உடல் 143 பயின்ட் வியர்வையை வெளியேற்றுகிறது.
- நாம் 23,043 தடவை சுவாசிக்கிறோம்.
- நாம் 483 கன அடி காற்றை சுவாசிக்கிறோம்.

✎ **நிஸைக்கா நிஸ்தார்**
**கா/முஸ்லிம் ம.க.**
**காலி**

## இலங்கையில் இலவசக் கல்வி

- சுதந்திர இலங்கையின் முதலாவது கல்வி அமைச்சர் - ஈ.ஏ. நூகாவெ
- கட்டாய கல்வி வயதெல்லை - 5 முதல் 14 வரை
- இலவசக் கல்வி அறிமுகமான ஆண்டு - 1945
- வறுமையான மாணவர்களுக்கு உதவ புலமைப் பரிசில்கள் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு - 1952
- பாடத் திட்டங்களில் தொழில் முன்னிலைப் பாடங்கள் இணைக்கப்பட்ட ஆண்டு - 1972
- இலவச பாடநூல்கள் வழங்கப்பட்ட ஆண்டு - 1980
- இலவச மதிய உணவுத் திட்டம் அறிமுகமான ஆண்டு - 1989
- இலவச சீருடை விநியோகம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு - 1993

✎ **ரஸா முஹமட்**
**கல்கமுவ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதன் முதலில்

- முதன் முதலில் இஸ்லாத்தில் ஷஹீதானவர்? சுமையா (ரழி)
- முதன் முதலில் அருளப்பட்ட அத்தியாயம்? சூரத்துல் அலக்
- முதன் முதலில் முஸ்லிம்கள் நோக்கிய கிப்லா? பைத்துல் முகத்திஸ்
- முதன் முதலில் இஸ்லாத்தை ஏற்ற பெண்மணி? கதீஜா (ரழி)
- முதன் முதலில் இஸ்லாத்தை ஏற்ற சிறுவன்? அலி (ரழி)
- முதன் முதலில் இஸ்லாத்தில் நடைபெற்ற யுத்தம்? பத்ர் யுத்தம்
- முதன் முதலில் முஸ்லிம்கள் ஹிஜ்ரத் சென்ற நாடு? அபீஸீனியா
- முதன் முதலில் அமைக்கப்பட்ட இஸ்லாமியத் தலைநகரம்? மதீனா
- முதன் முதலில் கிலாபத் பொறுப்பேற்ற கலீபா? அபூபக்ர் (ரழி)
- முதன் முதலில் இஸ்லாமிய வரலாற்றில் கடற்படை அமைத்த கலீபா? உஸ்மான் (ரழி)

**எம்.எப்.எப். சஸ்னியா**
**முஸ்லிம் பாலிகா வி.**
**கஹடோவிட்ட**




# உங்கள் வயது என்ன?

- வயதின் நீளத்தை வருடங்கள் தீர்மானிப்ப தில்லை. நாம் வாழ்வில் செய்த சாதனைகள்தான் தீர்மானிக்கின்றன.
- நாம் வாழ்வில் அடைந்த பயனை நாம் விட்டுச் செல்லும் கட்டடங்கள் உணர்த்துவதில்லை. நமக்காக கண்ணீர் விடும் உறவுகள் உணர்த்து கின்றன.
- பெயருக்கு பின்னால் வரும் ஒற்றை எழுத்துக்கள் அல்ல எமது கல்வித் தரத்தை தீர்மானிப்பது. நாம் கற்றவற்றில் எத்தனை சதவீதம் வாழ்வில் நடைமுறைப்படுத்துகிறோம் என்பதே நமது கல்வியின் தரமாகும்.
- வீட்டு வரவேற்பறையில் அடுக்கி வைத்திருக்கும் நினைவுச் சின்னங்கள் அல்ல எமது வாழ்வின் வெற்றிக்கான அடையாளங்கள். ஏழைகளின் முகத்தில் எம்மால் மலர்ந்த புன்னகை எமது வாழ்வின் வெற்றிக்கான அடையாளங்கள்.

**பாத்திமா நதா**
**இக்கிரிகொல்லாவ மு.ம.வி.**

# வீர மகளாகிறேன்

என் தாயே
உன் மகளாக நான் இன்று
வீர நடை போட
வாழ்த்திடுவாய் என்னை...!

நான் ஒரு நாளில்
உன் கரம் பற்றியவளாய்
இவ்வுலகை சுற்றிட
கனாக் காண்கிறேன்...!

கவலைப்படாதீர் என் தந்தையே
நீர் காணும் கனவுகளை
நிதர்சனமாய் உம் விழி பார்க்க
சாதனைகள் நான் படைப்பேன்...!

தாயே...!
என் அன்பின் தந்தையே
தியாகங்கள் செய்தீர் எனக்காக
என் வாழ்க்கை வளமாக
என் வெற்றிகள் வசமாக...!

உமக்காக நான்
லட்சியங்களில் லட்சமாய் நின்று
சரித்திரம் படைத்திட
ஆயத்தமாகிறேன்
உம் வீர மகளாக...!




**சும்லா அபூபக்கர்**
**ஜாமிஆ ஆயிஷா ஸித்தீக்கா**
**மாவனல்லை**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நீதியான அரசனின் தீர்ப்பு



ஓர் ஊரில் சாலிம் என்ற ஒரு வியாபாரி இருந்தான். அவன் வியாபார நோக்கமாக வெளியூர் செல்வதற்கு நாடினான். எனவே, அவனிடமிருந்த தங்க நாணயங்களை ஒரு பையில் போட்டு தன் நண்பனிடம் ஒப்படைத்தான். தான் திரும்பி வந்ததும் இதனைத் தர வேண்டும் என்று கூறினான். சாலிமுடைய நண்பன் இதனை ஏற்றுக் கொண்டான்.

சில வருடங்களுக்கு பின்னர் சாலிம் வியாபாரத்தை முடித்துக் கொண்டு தன் ஊருக்கு திரும்பினான். பின் சாலிமுடைய நண்பன் சாலிமுக்கு அவனுடைய பையை, திருப்பிக் கொடுத்தான். அவனுடைய நண்பனின் அமானிதத்தை கண்ட சாலிம் மகிழ்ச்சியடைந்தான். நண்பனுக்கு நன்றி கூறி விட்டு தன் வீட்டிற்கு சென்றான்.

பின்னர், சாலிம் வீட்டில் தன் பையை திறந்து பார்த்தபோது அதில் தங்க நாணயங்களுக்கு பதிலாக வெள்ளி நாணயங்கள் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தான். இதனைப் பற்றி நண்பனிடம் கேட்டபோது, ''தான் அதனை எடுக்கவில்லை'' என நண்பன் கூறினான்.


சாலிம் நீதிபதியிடம் சென்று முறையிட்டான். வழக்கை விசாரித்த நீதிபதி சாலிமிடம் ''நீர் எப்போது தங்க நாணயங்களை வழங்கினீர்?'' எனக் கேட்டார். அதற்கு அவன் ''ஏழு வருடங்களுக்கு முன்னர் நான் வியாபார நோக்கமாக செல்லும்போது இவனிடம் நாணயங்களை கொடுத்தேன்'' எனறு கூறினான்.

அதனை சாலிமின் நண்பன் ஒத்துக் கொண்டான். பின் நீதிபதி அந்த நாணயங்களை கொட்டினார். அது நான்கு வருடங்களுக்கு முன் செய்யப்பட்டவையாக இருந்தன. அதனைப் பற்றி நண்பனிடம் கேட்ட போது அவனது தவறை உணர்ந்தான். அவன் மூன்று வருடங்களுக்கு முன் தங்க நாணயங்களை எடுத்து அதற்கு பதிலாக வெள்ளி நாணயங்களை அப்பையில் போட்டதாகக் கூறி நண்பனுக்கு மோசடி செய்ததற்காக நண்பனிடம் மன்னிப்பு கேட்டான். இனி இவ்வாறான தவறுகளைச் செய்ய வேண்டாம் எனக் கூறிய நீதிபதி சாலிமுடைய நண்பனுக்கு அவனுடைய தங்க நாணயங்களை திருப்பி கொடுக்கும்படி உத்தரவிட்டார்.

**பஸ்ரினா ஸாதிக்**
**கதீஜதுல் குப்றா பெ.க.**

---

# இப்லீஸின் நண்பர்கள்



- அநீதக்கார தலைவன்
- பெருமை கொண்டவன்
- எவ்வாறு பணம் திரட்டி, எவ்வாறு செலவு செய்கிறோம் என்பதை பொருட்படுத்தாத செல்வந்தன்.
- அரசன் புரியும் அக்கிரமத்தை ஆதரிக்கும் அறிஞர்
- மோசக்கார வியாபாரி
- உணவுப் பொருளை (அதிக விலைக்காக) பதுக்கி வைப்பவன்
- விபசாரி
- வட்டி உண்பவன்
- எவ்வாறு பணம் சேர்த்தான் என்பதை இலட்சியம் செய்யாத உலோபி
- எப்போதும் மதுபானம் அருந்துபவன்

**எப். ஹதிகா இயாஸ்**
**க/ஜாமிஉல் அஸ்ஹர் ம.க.**
**உடதலவின்ன மடிகே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் களஞ்சியம்

ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் இடம்பெறும்
அறிவுக் களஞ்சிய நிகழ்ச்சி வினாக்களின் தொகுப்பு

## முதல் சுற்று (இஸ்லாம் தொடர்பான வினாக்கள்)

1. ரமழான் மாதத்தில்தான் முதன் முதல் அல்குர்ஆன் இறங்கியது. 'ரமழான்' என்ற அரபுச் சொல்லின் தமிழ் பதம் யாது?
2. ஹஸரத் உதுமான் (ரழியல்லாஹுஅன்ஹு) அவர்கள் எத்தனையாவது வயதில் புனித இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக் கொண்டார்கள்?
3. அல்குர்ஆனில் மிகப் பெரிய சூரா எது? மிகச் சிறிய சூரா எது?
4. ஹஸரத் உதுமான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் குழப்பக்காரர்களால் கொலை செய்யப்பட்ட ஹிஜ்ரி ஆண்டு எது?
5. ரமழான் மாதம் எத்தனையாவது இஸ்லாமிய மாதமாகும்?
6. உம்றாவின் பர்ளுகள் எத்தனை?
7. பாத்திமா நாயகி அவர்களின் பெண் குழந்தைகள் மூவரினதும் பெயர்களைக் கூறுக?
8. கர்பலா நிகழ்வு இடம்பெற்ற மாதம் எது?
9. ஹஜ்ஜின் பர்ளுகள் எத்தனை?
10. ஹிஜ்ரத் நடைபெற்றது எந்த மாதத்தில் ஆகும்?
11. கலீலுல்லாஹ் (அல்லாஹுத்தஆலாவின் உன்னத நண்பன்) என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டவர் யார்?
12. ஹுனைன் யுத்தம் ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டில் நடைபெற்றது?
13. றியாலுஸ்ஸாலிஹுன் என்ற புகழ் பெற்ற ஹதீஸ் நூலைத் தொகுத்த பிரபல ஆசிரியர் யார்?
14. 'ஹிப்லுல் புலூல்' என்ற சமூக நலச் சங்கத்தை உருவாக்கியவர் யார்?
15. நூஹ் நபியவர்கள் மரணிக்கும்போது அன்னாரின் வயது எத்தனை?
16. அரபு மொழியை தேசிய மொழியாக்கிய கலீபா யார்?
17. ஹஸரத் உதுமான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஆட்சிக் காலம் எத்தனை வருடங்கள்?

## இரண்டாம் சுற்று (பொது அறிவு)

1. இலங்கையில் இலவசப் பாடநூல் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டது எத்தனையாம் ஆண்டிலாகும்?
2. பாடசாலைகளில் இலவசச் சீருடை விநியோகம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
3. உலகப் புகழ் பெற்ற நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
4. 1840 ஆம் ஆண்டு உலகில் முதன் முதல் வெளியிடப்பட்ட முத்திரை என்ன பெயரால் அழைக்கப்பட்டது?
5. உலகின் முதலாவது முத்திரையில் பொறிக்கப்பட்ட உருவம் யாருடையது?
6. ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது முத்திரைகள் என இரு முத்திரைகள் 1847 இல் வெளியிடப்பட்டன. ஒன்றில் கண்டுபிடிப்பாளரும் அரசியல்வாதியுமான பெஞ்சமின் பிராங்கிளினின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. அடுத்த முத்திரையில் யாருடைய உருவம் பொறிக்கப்பட்டிருந்தது?
7. இலங்கையில் இலவசக் கல்வி எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
8. இலங்கையில் BTT க்குப் பதிலாக G.S.T. அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு எது?
9. உலகப் புகழ் பெற்ற ஓவியர் லியானாடோ டாவின்ஸி எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
10. சேர் முஹம்மத் மாக்கான் மாக்கார் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை காலியில் கற்றுப் பின்னர் கொழும்பில் எப்பாடசாலையில் தனது கல்வியைத் தொடர்ந்தார்?

**விடைகள் 19 ஆம் பக்கம் பார்க்க...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாட வாழ்வில் اللغة العربية

# அரபு மொழி

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி BA)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

## اِحْتِرَامُ الكَبِيْرِ

رَكِبَ مَحْمُوْدٌ الحَافِلَةَ، وَكَانَتْ مُزْدَحِمَةً، فَرَكِبَهَا رَجُلٌ كَبِيْرُ السِّنِّ فَلَمْ يَجِدْ مَكَانًا يَجْلِسُ فِيْهِ، فَقَامَ مَحْمُوْدٌ مِنْ مَكَانِهِ، وَأَجْلَسَ الرَّجُلَ الكَبِيْرَ، فَشَكَرَهُ، وَدَعَا لَهُ.

மஹ்மூத் பஸ்வான்டி யொன்றில் ஏறிப்பயணம் செய்தான். அது சனநெரிசல் மிக்கதாக இருந்தது. அப்போது வயதில் மூத்த ஒரு மனிதர் அந்த பஸ்வண்டியில் ஏறிக் கொண்டதும் அமர்ந்து கொள்வதற்கான இடம்ஒன்றை பெற்றுக்கொள்ளவில்லை. உடனே மஹ்மூத் தனது இடத்திலிருந்து எழுந்து மூத்த மனிதரை உக்காரச் செய்தார். அதற்காக அந்த மனிதர் மஹ்மூதுக்கு நன்றி தெரிவித்து பிரார்த்தித்தார்.

| | |
|---|---|
| الاِحْتِرَامُ | கண்ணியப்படுத்தினான் |
| الحَافِلَةُ المُزْدَحِمَةُ | சனநெரிசல் மிக்க பஸ்வண்டி |
| كَبِيْرٌ ج كِبَارٌ | மூத்தோர் |
| وَجَدَ | பெற்றுக் கொண்டான் |
| مَنْ جَدَّ وَجَدَ | தெண்டித்தவன் பெற்றுக் கொள்வான் |
| سُؤَالٌ ج أَسْئِلَةٌ | வினாக்கள் |
| جَوَابٌ ج أَجْوِبَةٌ | விடைகள் |
| صَغِيْرٌ ج صِغَارٌ | இளையவவர்கள் |


### இணைக்குக.

| سُؤَالٌ | جَوَابٌ |
|---|---|
| مَاذَا رَكِبَ مَحْمُوْدٌ؟ | يَدُلُّ عَمَلُ مَحْمُوْدٍ عَلَى أَنَّهُ وَلَدٌ مُؤَدَّبٌ |
| هَلْ كَانَتْ الحَافِلَةُ خَالِيَةً؟ | أَقُوْمُ مِنْ مَكَانِي وَأُجْلِسُهُ فِيْهِ |
| مَنِ الذِّي رَكِبَ الحَافِلَةَ؟ | شَكَرَ الرَّجُلُ وَدَعَا لَهُ |
| هَلْ وَجَدَ الرَّجُلُ الكَبِيْرُ مَكَانًا لِلْجُلُوْسِ؟ | أَجْلَسَهُ فِيْ مَكَانِهِ |
| هَلْ رَأَى مَحْمُوْدٌ الرَّجُلَ الكَبِيْرَ؟ | نَعَمْ، رَأَى مَحْمُوْدٌ الرَّجُلَ الكَبِيْرَ |
| مَاذَا عَمِلَ مَحْمُوْدٌ نَحْوَ الرَّجُلِ الكَبِيْرِ؟ | لَمْ يَجِدْ الرَّجُلُ الكَبِيْرُ مَكَانًا لِلْجُلُوْسِ |
| مَاذَ فَعَلَ الرَّجُلُ؟ | رَكِبَ الحَافِلَةَ رَجُلٌ كَبِيْرُ السِّنِّ |
| مَاذَا تَفْعَلُ إِذَا رَأَيْتَ رَجُلًا مَرِيْضًا وَاقِفًا فِي الحَافِلَةِ وَأَنْتَ جَالِسٌ؟ | لَا، بَلْ كَانَتْ الحَافِلَةُ مُزْدَحِمَةً |
| عَلَى أَيِ شَيْءٍ يَدُلُّ عَمَلُ مَحْمُوْدٍ؟ | رَكِبَ مَحْمُوْدٌ الحَافِلَةَ |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைக்குக.




١. ماذا يرْكَبُ الصَّدِيقَانِ؟

٢. إلى أينَ هُمَا ذَاهِبَانِ؟




٣. أينَ الصَّدِيقَانِ؟

٤. ماذا يَفعَلان؟



٥. أينَ الصَّدِيقَانِ؟

٦. ماذا يَفعَلان؟



٧. أينَ الصَّدِيقَانِ؟

٨. متى يَذْهَبَانِ إِلَى المَقصَفِ؟



٩. أينَ الصَّدِيقَانِ؟

١٠. ماذا يَفعَلان؟



١١. ماذا يَفعلُ الصَّدِيقَانِ؟

١٢. لماذا يَشْرَبان الشَايَ؟

يَسْتَذْكِرَانِ دُرُوسَهُمَا

يَشْرَبَانِ الشَايَ حَتَّى لَا يَنَامَا

هُمَا فِيْ المَلْعَبِ

هُمَا يَلْعَبَانِ كُرَةَ القَدَمِ

هُمَا فِيْ المَقصَفِ

يَذْهَبَانِ إِلَى المَقصَفِ فِيْ الإِسْتِرَاحَةِ.

هُمَا فِيْ الصَّفِّ

أَحَدُهُمَا يَكْتُبُ وَالآخَر يَقْرَأ

الصَّدِيقَانِ فِيْ المَكْتَبَةِ


هُمَا يَقْرَآنِ بَعْضَ الكُتُبِ

يَرْكَبُ الصَّدِيقَانِ دَرَّاجَتَيْنِ

هُمَا ذَاهِبَانِ إِلَى المَدْرَسَةِ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## Assalamu alaikum dear friends,

We are in the second month of the New Year of 2017 and hence I'm quite sure that most of you would be exuberant and cheerful regarding the New Year resolutions you are holding on to.

Yeah!!! With the same spirit, let me reveal you some secrets today. "Beauty secrets".

Have you come across the statement "beauty adds sparkle to life". In fact, you may find stuff like these in cosmetic products and beauty related magazines ect...Anyway, the statement is very true in its essence but when it comes to the "beauty of the soul".

All of us are comprised of two major elements: physical body and the soul. We do take steps to adorn, decorate and satisfy the needs of the former that is the physical body; yet, it is rather saddening to know that we don't pay much attention to the later, which is very important.

Do you know the source from which we can adorn our souls?

It is the holy Qur'an, which was revealed to mankind as a miracle of the miracles.

Now let me elaborate, the truth in this with the use of a very simple logic.

We all know that our bodies were created out of soil. Hence, all the needs of our bodies are fulfilled by the very soil. Isn't it friends? From the food we intake, the clothes we wear to materials we use, everything is obtain from the same source "the soil".


Now coming to the next point, our souls were composed out of the "Rooh" which the Almighty Allah blew into us. Hence, what is the source from which the needs of the souls could be met? Yes, it is the words of Allah, the holy Qura'n. It is via the Qura'n that we can achieve beautiful souls.

Interesting. Isn't it friends?

Remember that to beautify your souls, first you need to purify them. This procedure is known as "Thazkiyah An nafs". Here are some tips to purify and add glamour to your souls.

- ✓ Begin with Repentance
- ✓ Salah: The Elixir of Life
- ✓ Build a Relationship with the Quran
- ✓ Perform Deeds that Pull you to Jannah
- ✓ Think positive
- ✓ Read out good stuff
- ✓ Listen to meaningful nasheeds

Courtesy: http://blog.islamiconlineuniversity.com/eeman-boosters-to-nourish-your-soul/





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Hadith of the month

A man asked the Prophet (Sallallahu 'Alaihi Wa Sallam), "What sort of deeds or (what qualities of) Islam are good?" The Prophet (Sallallahu 'Alaihi Wa Sallam) replied, 'To feed (the poor) and greet those whom you know and those whom you do not Know.

## Your Corner



# My Father

My father is Mr. Ali. He is tall and fat. He has a moustache. He also has freckles on his cheek. His eyes are small but they make him look very fierce. I am very scared, whenever he stares at me for being naughty.

He is a business man. He works for long hours. He does not come home for dinner. I look forward to the weekends. Because, he takes me for cycling or kite flying. I know that he wants rest, but he spends time with me instead.

To show him that I am thankful for everything he does, I clean the home and I cook his favorite pancake for him on Sunday mornings.


I'm so lucky to be his son. He is my hero.

***M. Imran ali***
***Al-Azhar c.c***
***Grade -7 A***

# *Laugh* a while:

**Son:** Mom, I have a good news and bad news for you. The good news is that I won't be watching TV from tomorrow and the bad news is that my ball hit the TV set and broke the screen

**Mom:** !!!!!



# My loving brother

Hi friends! My loving brother's name is AM. Jafran. He is the first son in our little family. He is a referee. He has got a round face and dark hair. He always spends his leisure time playing football and browsing useful matters to increase his knowledge. I think my brother is quite a handsome guy like my father and he is talented as well. He keeps everyone of us laughing with his words and actions. He has a helping mind and he has innovative ideas. He is an educated boy, so he helps us in our studies and looks into all our needs. As he is the first son of my family he has got many responsibilities towards everyone. When my dad has any trouble in his financial matters, my brother gives him full support. He is a good role model to us. He is professionally a football referee. I wish him for his dream career. I pray Allah to fulfill his goal. Thanks for Allah for giving me such a lovely brother. I love him so much!

***AF.AQSHA,***
***GRADE-11,***
***KL/MAHMOOD BALIKA, KALMUNAI***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A little Story

It was a dark night. A blind man was walking with a lighted lamp in his hand.2 men laughed at him and asked what use was the lamp to him. The blind man laughed back and said that they were fools. People were generally very careless. They might not notice him in the darkness and bump against him. It was for them, that he was carrying a lighted lamp. The 2 men realized the wisdom of the blind man and apologized to him for laughing at him.

***S.F. Shimla***
***ku/Paragahadeniya national school***
***Grade-7B***

# Capital cities of European countries



01. France = Paris
02. Spain = Madrid
03. Portugal = Lisbon
04. Switzerland = Bern
05. Ireland = Dublin
06. Poland = Warsaw
07. Ukraine = Kiev
08. Netherland = Amsterdam
09. Italy = Rome
10. Greece = Athens
11. German = Berlin
12. Belgium = Brussels
13. Luxembourg = Luxembourg city
14. Cyprus = Nicosia
15. United Kingdom (UK) = London

***Reishma mezaila Abdul kareem***
***P/ fathima Balika maha vidyalaya***

# The Independence day in Sri Lanka

4th Febrauary is our Independence day. It was on this day in 1968 we won our freedom from the british rule. the people of India had to make many sacrifices to win their freedom. But we the people of sri Lanka won our freedom without bloodshed. Our late national heroes like honorable D.S. Senanayaka, sir D.M. Jaythilaka, E.W. Perara and sir Ponnampalam Ramanadan made representation to the British government and won our Freedom.

Today was have a government of our own the Independence day is celebrated throughout the country the main ceromany is held at the Independence Square. Colombo where the president hoists the National flag. Celebrations also held in outer cities of the country. The main ceremony is marked by a guard of honour to the president and with a salute of 21 guns.

The ceremony ends after the president's speech to the nation.

***Thahany amjath razik***
***Muslim Ladies Arabic College, Kal-eliya***

I'm eagerly waiting for your contributions with comments, stories, poems and essays. The best ones will be published insha Allah.
So write to me at

## I learn every day

A 61/ 5,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் அறிமுகம்




தலை நகரில் தலை நிமிர்ந்து நிற்கும் வேறு கிளைகள் ஏதுமற்ற மாபெரும் புத்தக சாலையான இஸ்லாமிக் புக் ஹவுஸ் வெளியீட்டகத்தின் மற்றுமொரு புதிய அறிமுகம் புதுப் பொலிவுடன் வெளிவந்துள்ள உசாத்துணை புத்தகம் ''ஆசான்''

இது முழுக் முழுக்க புலமைப் பரிசில் எழுதும் மாணவர்களின் தமிழ் மொழி அறிவு, ஆங்கிலம், சிங்களம், சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் மற்றும் பொது அறிவு போன்ற விடயங்களை உள்ளடக்கிய உசாத்துணை நூலாகும். இப் புத்தகம் உருவாக்கப்பட்டுள்ள முழு நோக்கம் மாணவர்களை இலகுவாக கடந்த கால புலமைப் பரிசில் வினாப் பத்திரங்களை விளங்குவதற்கு தயார்படுத்துவதாகும்.

புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக அனுபவமும், தகுதியும், திறமையும் வாய்ந்த திரு. மூ.பா. முஹம்மத் சாபிர் என்ற பிரசித்தி பெற்ற ஆசிரியரினால் எழுதப்பட்டு இஸ்லாமிக் புக் ஹவுஸினால் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் இப் புத்தகம் இலகுவான மொழி நடையுடன் அழகிய முன் அட்டையைத் தாங்கி நியாயமான விலையில் மாணவர்களின் அறிவுப் பசிக்கு வித்திட இஸ்லாமிக் புக் ஹவுஸ் விற்பனை நிலையத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள தயாராக உள்ளது.

தலை நகரை அடுத்து வாழும் மாணவர்களின் மேம்பாடு, நலன் கருதி இப் புத்தகத்தை (ஆசான்) பெற்றுக்கொள்ள சகல வித ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

எங்கள் வலைதளம் (www.ibh.lk) மூலமாகவும் தபால் மூலமாகவும் பெற்றுக் கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**மேலதிக விபரங்களுக்கு**
இல. 77 தெமடகொட வீதி,
மருதானை, கொழும்பு 09.

**தொ.பே. இல:**
**0112 684851, 0112669191**

### அறிவுக் களஞ்சியம்...

**13 ஆம் பக்கத் தொடர்... விடைகள் (இஸ்லாம்)**

1. சுட்டெரித்தல்
2. 35 ஆவது வயதில்
3. மிகப் பெரியது - சூரத்துல் பகரா
   மிகச் சிறியது - சூரா அல் கௌஸர்
4. ஹிஜ்ரி 35
5. 9 ஆவது மாதம் 6. 5
7. உம்முகுல்ஸூம், ருகையா, ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா)
8. முஹர்ரம் 9. 6
10. முஹர்ரம்
11. நபி இப்றாஹிம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள்
12. ஹிஜ்ரி 8
13. இமாம் நவவிஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள்
14. 950 வருடங்கள்
15. முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்
16. அப்துல் மலிக் பின் மர்வான்
17. 12 வருடங்கள்

**பொது அறிவு**

1. 1980 2. 1993 3. இங்கிலாந்து
4. **Penny Black** (பென்னி பிளக்)
5. விக்டோரியா மகாராணியின் உருவம்
6. ஜோர்ஜ் வோஷிங்கடன்
7. 01.10.1945 8. 1998 ஏப்ரல்
9. இத்தாலி
10. கொழும்பு உவெஸ்லிக் கல்லூரி

## எண்ணங்களின் வண்ணங்கள் - 19

- உங்களது சித்திரம் A4 தாள் அளவில் அமைதல் வேண்டும்.
- சித்திரங்களுக்கு பயன்படுத்தும் வர்ணம் 'சோக் கலர்' ஆக இருத்தல் வேண்டும்.
- சிறந்த மூன்று படைப்புகளுக்கு பெறுமதியான புத்தகம் வழங்கப்படுவதுடன் பாராட்டைப் பெறும் சித்திரங்களும் அகரத்தில் பிரசுரிக்கப்படும்.

**தலைப்பு: இல்ல விளையாட்டுப் போட்டி**

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2016 பெப்ரவரி 20**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம்சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முஸ்லிம்களின் தேசத்திற்கான பங்களிப்பு

இலங்கை எமது இரண்டாம் தாய். நாங்கள் வியர்வை சிந்தி வளப்படுத்தி, இரத்தம் சிந்திக் காத்த உன்னத தாயவள். வரலாற்றில் எப்போ தெல்லாம் இலங்கைத் தாய்க்கு ஆபத்து வந்ததோ அப்போதெல்லாம் இலங்கைத் தாயைக் காப்பாற்ற முன்வரிசையில் நின்று நாம் போராடியுள்ளோம்.

எதிர்காலத்தில் இலங்கையை பாது காக்கும் பணியை மாத்திரம் நாம் செய்யப் போவதில்லை. எமது ஆற்றல்களைப் பயன்படுத்தி இந்த நாட்டை வளமிக்க தேசமாக செதுக்கப் போகின்றோம்.

✍ **ராஹிலா ஸைத்தூன்**

முஸ்லிம்கள் வரலாற்றில் இலங்கைக்கு செய்த சில பங்களிப்புக்கள்:

**மருத்துவத் துறைக்கு ஆற்றிய பங்களிப்பு**

- இலங்கையில் யூனானி மருத்துவத்தை அறிமுகம் செய்தமை.
- கண்டி மன்னன் செனரத்தும் அவனுடைய மகன் இரண்டாம் இராஜசிங்கனும் தமக்கு மருத்துவ சேவை செய்த காலியைச் சேர்ந்த சுல்தான் என்ற யூனானி மருத்துவருக்கு இரண்டு காணிகளை வழங்கி கௌரவித்ததுடன் அரச சபை வைத்தியராகவும் அவரை நியமித்தனர்.
- தமக்கு விசுவாசமாக நடந்த வைத்தியர் ஒருவருக்கு இலங்கை அரசன் பெஹேத்கே முகாந்திரம் (அரச மருத்து இலாகாவின் தலைவர்) எனும் பொறுப்பை வழங்கியதுடன் தும்பறை, மாத்தளை, யடிநுவர முதலிய பகுதிகளில் காணிகள் வழங்கி கௌரவித்ததுடன் 'வைத்திய திலக ராஜககுண கோபால முதலியார்' எனும் பட்டத்தையும் வழங்கினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விவசாயத்திற்கு வழங்கிய பங்களிப்பு

முஸ்லிம்களின் வெளிநாட்டு வர்த்தகத்தினால் கிடைத்த வருவாயைக் கொண்டே அனுராதபுரத்தின் விவசாயக் கட்டமைப்புக்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

''இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் வளர்ச்சி அடைந்திருந்த காலப் பகுதியிலேயே பாரிய அளவிலான நீர்ப்பாசன வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.'' -பேராசிரியர் குணவர்தனா

### அந்நிய சக்திகளிடம் இருந்து நாட்டைக் காப்பாற்றல்

- போர்த்துக்கேயருக்கு எதிராக மாயாதுன்னை மன்னன் போராடியபோது இலங்கை முஸ்லிம்கள் அவனுக்கு கள்ளிக்கோட்டை மன்னன் சமோரினின் உதவியைப் பெற்றுக் கொடுத்தனர்.
- சிங்கள மன்னர்களின் அரச சபையில் பணியாற்றிய நான்கு அமைச்சர்களும் அந்நிய மக்கள் மத்தியில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்போராகவும் வெளிநாட்டு வர்த்தகத்தில் மன்னனுக்கு ஆலோசனை சொல்பவர்களாகவும் காணப்பட்டனர்.
- தமக்கு எதிராக மாத்தறை முஸ்லிம்கள் கண்டி மன்னர்களுக்கு உதவினார்கள் என்ற ஒற்றைக் காரணத்திற்காக 1642 இல் போர்த்துக்கேயர் 200-300 முஸ்லிம்களைக் கொன்று அவர்களின் மனைவிகளையும் பிள்ளைகளையும் சிறையில் அடைத்தனர்.
- போர்த்துக்கேயரை துரத்த உதவியதற்காக கண்டி மன்னன் முஸ்லிம்களுக்கு அக்குரணையில் காணி வழங்கினான்.

### வியாபாரத்திற்கு வழங்கிய பங்களிப்பு

- இலங்கை வியாபாரத்தின் உயிர்நாடியான தவளத்தை இலங்கையில் அறிமுகம் செய்தமை.
- முதலாம் புவனேகபாகுவின் சாம்ராஜ்யத்தின் வியாபார தூதுவராக அபூ உஸ்மான் என்பவர் எகிப்துக்கு சென்றார்.
- இலங்கையின் உற்பத்தி பொருட்களான யானை தந்தம், கறுவா, ஏலம், மாணிக்கங்கள் போன்றவற்றை உலக நாட்டின் சந்தைகளுக்கு கொண்டு சென்று இலங்கையின் பெயரை சர்வதேசத்தில் பிரபல்யப்படுத்தினர்.



### ஏனைய பங்களிப்புக்கள்

- நெசவுத் தொழிலை அறிமுகம் செய்தமை

பேருவளை நகரில் வாழ்ந்த முஸ்லிம் வணிகர் ஒருவரால் 12 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது 13 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நெசவுத் தொழில் இலங்கையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டதாக சேர் அலெக்ஸாண்டர் ஜோன்ஸ்டன் ஆங்கில கழகத் திற்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

- கறுவா செய்கையை விருத்தி செய்து இலங்கையை செல்வந்த நாடாக மாற்ற முயன்றமை.

ஆங்கிலேயரின் காலத்தில் மாத்திரம் இப்பணியில் 25,000 பேர் ஈடுபட்டிருந்தனர்.

- கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கனுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒரு சதித் திட்டத்தைப் பற்றி முஸ்லிம் ஒருவர் மன்னனுக்கு அறிவித்து அவனைக் காப்பாற்றியதால் மன்னன் அவருக்கு செப்புப் பட்டயம் ஒன்றை வழங்கி காணிகளையும் பரிசளித்தான்.
- அரச பிரதிநிதியாக பணியாற்றியமை

ஜோன் பைபஸ் கண்டி மன்னனை சந்திக்க வந்தபோது அரசனின் பிரதிநிதியாக உதுமா லெப்பைதான் அவனை அழைத்து வர கண்டிக் குச் சென்றார்.

- பழங்கால நூல்களை பாதுகாத்தமை

10 ஆம் நூற்றாண்டளவில் பேருவளையில் குடியேறி வாழ்ந்த ஜமாறுதீன் என்பவரும் அவரது குடும்பத்தினரும் 700-800 ஆண்டுகளாக இலங்கை மருத்துவ நூல்களை பேணிப் பாது காத்து வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை

# உதாசீனம் வேண்டாம்

சர்மிலா ஏ றாஸிக்
காத்தான்குடி - 05

''அன்பான பொதுமக்களுக்கு முக்கிய அறிவித்தல். தற்போது நாடளாவிய ரீதியில் டெங்கு அபாயம் காணப்படுவதால் தங்களுடைய வீட்டையும் சூழலையும் மிகவும் சுத்தமாக வைத்திருக்குமாறு பொதுச் சுகாதார திணைக்களம் வேண்டுகோள் விடுக்கிறது. தவறும் பட்சத்தில் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகிறோம்.' என்ற ஒலிபெருக்கியின் சத்தம் ஊரையே வியாபித்திருந்தது.

அறிவித்தல் முடியும் வரை பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த சிபானா,

''ம்... இருக்கிற வேலை காணாததிற்கு இது வேற, கொஞ்சம் நாளைக்கு சத்தம் போடுவாங்க அப்புறம் எதுவுமில்லை. இதுக்கெல்லாம் காது கொடுக்கத் தேவையில்லை. சும்மா இருந்துட்டு போவம் பாத்திமா ராத்தா''

என்று கூறியவளாய் தனது கவனத்தை சீரியலின் பால் திசை மாற்றினாள்.

கதிரவன் நடுவானில் தனது பிரகாசமான கதிர்களால் வியாபித்துக் கொண்டிருந்தான். அப்போது சிபானா தனது மகன் பாடசாலை விட்டு வெயிலின் சோர்வோடு வீட்டை அடைவதைக் கண்டதும் மகனை வரவேற்றாள். அவனருகே உட்கார்ந்ததும்,

''உம்மா... உம்மா... இன்று பாடசாலையில் நிறைய பேர் வந்தாங்க. அவங்க பாடசாலை சுத்தம் பற்றி பேசினாங்க. மற்றும் வீட்டில் தேங்கி நிற்கும் நீரில் நுளம்பு பெருகுவதாக கூறினாங்க. நாளை பாடசாலை சிரமதானம்... பெற்றோர் அனைவரும் இதில் கலந்து கொள்ள வேண்டும் என்று சொன்னாங்க. உம்மா நீங்க போக வேண்டும்''





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறி முடித்தான் சிபானாவின் செல்ல மகன் முஹம்மத்.

''ம்... சரி பார்ப்போம்''

என்று மகனுக்கு சமாளிப்பு வார்த்தையை கூறியவளாய் அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள்.

நாட்கள் மூன்றும் கழிந்தன. வழமையான காலைப்பொழுது வேகமாக புலர்ந்தது. சிபானா காலை வேலைகளை சிறிது நேரம் செய்து முடித்தவளாய் ஓய்வுக்காக கதிரையில் சாய்ந்து தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் லயித்துப் போனாள். அப்போது கதவில் கேட்ட சத்தம் சிபானாவின் கவனத்தை திருப்பியது. கதவைத் திறந்த சிபானாவின் முன் சுகாதார பரிசோதகர்கள் நிற்பதைக் கண்டாள்.

''உங்கள் வீட்டில் டெங்கு பரிசோதனைக்கு வந்துள்ளோம்'' என்று உள்ளே நுழைந்தார்கள்.

டெங்கு காணப்படும் இடங்களைத் தேடினார்கள். சிபானாவின் வீட்டின் பின்புறம் சிரட்டைகளும் வெற்றுப் பேணிகளும் பொலித்தீன் பைகளும் தேவையற்ற பழைய பொருட்களும் ஆங்காங்கே பரவிக் கிடப்பதைக் கண்டதும் சிபானாவை அழைத்து உடனே துப்புரவு செய்யும்படியும், சூழலை அசுத்தமாக வைத்திருந்தமைக்கான அபராத பணத்தைக் கட்ட வேண்டிய பற்றுச்சீட்டையும் கொடுத்து விட்டு சென்று விட்டார்கள். தலையில் கைவத்து கைசேதப்பட்டவளாய் நின்றாள் சிபானா.

அப்போது பக்கத்து வீட்டு பாத்திமா ராத்தா வேகமாக ஓடி வந்தார். ''சிபானா...'' என்று அழைத்தவராய் அழத் தொடங்கினார்.

''சிபானா புள்ள... எனது மகன் சகி மூன்று நாட்களாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டு, வைத்தியசாலையில் டெங்கு காய்ச்சல் என்று இனங்கண்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. எனது மகனை பார்க்கும்போது கவலையாக உள்ளது. சிபானா நாம் தவறு செய்து விட்டோம். நமது வீட்டை, சூழலை சுத்தமாக வைத்திருக்கத் தவறி விட்டோம். உயிரைக் குடிக்கும் நுளம்பு பெருக நாமே காரணமாக இருந்து விட்டோம்'' என்று கண்ணீரோடு கூறி முடித்தார் பாத்திமா ராத்தா.

தான் ஒரு தங்கக் காப்பு வாங்க வைத்திருந்த காசு தண்டப் பணமாகப் போன நிலைமையைக் கூறி பாத்திமா ராத்தாவிடம் சிபானா கைசேதப்பட்டாள்.

''சரி சிபானா இனிமேல் நாம் வீட்டையும் எமது வீட்டுச் சூழலையும் சுத்தமாக வைத்திருப்போம். நுளம்புகள் பெருகும் இடங்களை அழித்து மிகவும் அழகான, சுத்தமான சூழலாக எமது வீட்டை, அயல் சூழலை வைத்திருப்போம்''

என்று கூறிய பாத்திமா ராத்தாவுக்கு கடமையுணர்வோடு சரி என்று தலையசைத்தாள் சிபானா. இருவரும் வீட்டை சுத்தம் செய்ய விரைந்தனர்.

அனைத்தையும் நோட்டமிட்டுக் கொண்டிருந்த டெங்கு நுளம்புகள் சில நமக்கு அழிவு நெருங்கி விட்டது என்று கத்திக் கொண்டு மற்ற நுளம்புகளுக்கு அறிவித்தல் வழங்கியவையாக அவ்விடத்தை விட்டு விரைந்தோடி மறைந்தன.

நாட்கள் கழிந்தன. சூழல் அழகானது. சுற்றமும் தூய்மையாகியது. ஆரோக்கியம் ஆட்சி செய்தது. ஆபத்துக்களும் அங்கிருந்து விலகியது.



சிறுவர் பகுதி
பொது நூலகம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணராக வர வேண்டும்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் தேறி தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற

## றொஷான் அக்தார்



சாதிக்கப் பிறந்தவர்கள் இருக்கிறார்கள்; சாதிக்கத் துடிப்பவர்கள் இருக்கிறார்கள்; தம் சாதனைகளால் சரித்திரத்தை மாற்றியவர்களும் இருக்கிறார்கள். அந்த வரிசையில் தன் சாதனை மூலம் ஒரு முன்மாதிரியாக அமைகிறார் கிண்ணியா மத்திய கல்லூரி மாணவன் றொஷான் அக்தார். றொஷான் அக்தார் 2016 க.பொ.த. (உ/த) பரீட்சையில் தேறி தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

அர்த்தம் பொதிந்த மந்தகாச புன்னகையுடன் தோற்றமளிக்கும் றொஷான் அக்தார் கிண்ணியா இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்தவர். முஹம்மத் மொஹிதீன் மஹ்தி - அப்துஸ் ஸலாம் சித்தி பாயிஷா தம்பதிகளின் புதல்வர் இவர். தந்தை முன்னாள் வங்கி ஊழியர், தாய் ஆசிரியை. இவருடனான நேர்காணலை இங்கு தொகுத்துத் தருகிறோம்.

**அயாத் அஹமட்**

**அகரம்:** க.பொ.த. (உ/த) பரீட்சையில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளீர்கள். இந்தச் சாதனையை நீங்கள் எதிர்பார்த்தீர்களா?

**றொஷான் அக்தார்:** அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹ் எனக்குத் தந்த மகத்தான பரிசு இது. நல்லதோர் அடைவை அடைய முடியும் என்ற பரிபூரண நம்பிக்கை என்னிடம் காணப்பட்டாலும் இந்த சாதனை பற்றி நினைக்கவே இல்லை. எமது பெற்றோரையும் எனக்கு கற்றுத்தந்த ஆசிரியர்களையும் ஏக காலத்தில் பெருமிதம் அடையச் செய்த இந்த சாதனையை பரிசளித்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

**அகரம்:** இந்த சாதனையை நோக்கிய உங்கள் வெற்றிப் பயணம் எவ்வாறு அமைந்திருந்தது?

**றொஷான் அக்தார்:** எனது வெற்றிக்கு காரணம் நேரத்தை திட்டமிட்டு சுய கற்றலுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கியமையாகும். சுய கற்றல் எனது உள்ளத்தில் ஆழப் பதிந்திருந்தது.

வெளியூருக்கு மேலதிக வகுப்புக்களுக்குச் செல்வது பற்றி நான் அதிக அக்கறை காட்டவில்லை. அது வீணான அலைச்சலையும் களைப்பையும் தருவதோடு எமது பொக்கிஷமான நேரத்தையும் கொள்ளையடிக்கின்றது. மறுபக்கம்,

இன்று எமது பிரதேசங்களில் வளங்கள் இல்லை என்பது ஒரு போலியான சாக்குப் போக்காகும்.

எமது பிரதேசங்களிலும் திறமையான ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். நூலகங்களில் தேவையான அளவு புத்தகங்கள் இருக்கின்றன. இணையதளங்களிலும் போதுமான அளவு குறிப்புக்கள் நிறைந்திருக்கின்றன. எல்லாவற்றையும் விட வீட்டில் பெற்றோரின் நிழலில் கற்கும்போது நெறி பிறழாது கற்க வாய்ப்புக்கள் உள்ளன.

**அகரம்:** உங்கள் எதிர்கால இலட்சியம் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ரொஷான் அக்தார்**: கிட்டிய கால இலட்சியமாக கொழும்பு பல்கலைக்கழகத்தில் நுழைந்து அங்கு பல சாதனைகளை நிகழ்த்த வேண்டும். அடுத்து, மருத்துவத்துறையில் நுழைந்து நரம்பியல் சத்திர சிகிச்சைத் துறை நிபுணராக வர வேண்டும். வைத்தியத் துறையில் நுழைவது என்பது ஒரு சாதனையாளராக வலம் வர மாத்திரமல்ல, இன்றைய நாளில் இணையற்ற தியாக சேவைகளுள் மருத்துவரின் பங்களிப்பு மகத்தானது. எமது கல்விக்கு ஏகப்பட்ட பணத்தை இந்த அரசு செலவிட்டுள்ளது. அது மக்களிடம் இருந்து மக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட பணமாகும். அந்தப் பணத்தில் படித்துவிட்டு சொந்த சுயநலத்திற்காக வெளிநாடு செல்லாமல் இந்த நாட்டு மக்களுக்கே சேவை செய்ய உத்தேசித்துள்ளேன்.

**அகரம்**: மாணவர்களின் பண்பாடு, ஆன்மிகம் பற்றி எவ்வாறான அறிவுரைகளை முன்வைக்கின்றீர்கள்?

**ரொஷான் அக்தார்**: அறிவின் அடையாளம் பணிவாகும். மாணவர்கள் எப்போதும் தம் ஆசிரியர்களின் முன் பணிவைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆசிரியர்களின் மனதை நோகடித்துவிட்டு ஒருபோதும் எம்மால் சாதனை சிகரங்களில் ஏற முடியாது. எம் புன்னகையே தம் வாழ்வின் இலக்குகளென வாழ்பவர்கள் எமது பெற்றோர். உச்சிவெயிலில் வியர்வை சிந்தியும் உடலை நொறுக்கி பாடுபட்டும் எமக்காக தம்மை தியாகம் செய்கிறார்கள். அவர்களை பெருமைப்படுத்தும் அளவு அவர்கள் பட்ட கஷ்டங்களுக்கு விடிவாக நாம் கல்வியில் ஆழமாக ஈடுபட வேண்டும்.

ஆன்மிகம் என அல்லாஹ்வுடனான தொடர்பை தனியாகப் பிரித்துப் பார்க்கத் தேவையில்லை. எமது முழு வாழ்வும், அதன் ஒவ்வொரு நொடியும் அல்லாஹ்வின் நினைவுடன் கலந்திருக்க வேண்டும். தஹஜ்ஜத் தொழுதுவிட்டு படிப்பை ஆரம்பிக்க வேண்டிய நாம், எமது நினைவாற்றல் விருத்திக்காக ஏகனிடம் இறைஞ்ச வேண்டும்.

இன்றைய மாணவர்களுக்கு நான் ஒரு முன்மாதிரி என நீங்கள் கூறலாம். ஆனால், அவர்கள் என்னையும் தாண்டி தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெறும்போது நான் பெரு மகிழ்ச்சியடைவேன். கல்வி என்பது எமது கனவாக மாற வேண்டும். பெற்றோர் திணித்தோ, ஆசிரியர்கள் வற்புறுத்தியோ கற்கும் கல்வி உரிய பலனைத் தராது.

**சிந்தனைக் கதை**

# எதற்காக கவலை

அன்றைய வகுப்பறைக்கு பாடம் நடத்த புதிய ஆசிரியர் ஒருவர் வந்திருந்தார். வந்தவுடன் ஒரு நகைச்சுவையைச் சொல்ல ஒட்டுமொத்த மாணவர்களும் வாய்விட்டுச் சிரித்தனர்.

திரும்பவும் அந்த விரிவுரையாளர் அதே நகைச்சுவையைச் சொல்ல பாதி மாணவர்கள் மாத்திரம் சிரித்தனர். மூன்றாம் தடவையும் அவர் அதே நகைச்சுவையைச் சொல்ல இப்போது மாணவர்கள் அவரை ஒரு மாதிரியாகப் பார்த்தனர். நான்காவது தடவையும் அவர் அதே நகைச்சுவையைச் சொல்ல இப்போது எல்லாரும் முகம் சுழித்தனர்.

ஒரு நிமிட இடைவெளியின் பின்னர் அவர் புன்னகைத்தவாறே கூறினார்: ஒரு நகைச்சுவைக்கு எம்மால் நான்கு தடவை கூட சிரிக்க முடியாது. ஆனால், வாழ்வில் எப்போதோ நடந்த ஒரு துன்பத்தை நினைத்து தினம் தினம் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம்...!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா
## CANADA

| | |
|---|---|
| தலைநகர் | - ஒட்டாவா |
| பெரிய நகர் | - ரொறன்ரோ |
| ஆட்சி மொழிகள் | - ஆங்கிலம், பிரெஞ்சு |
| பரப்பளவு | - 99,84,670 km$^2$ |
| நீர்ப் பகுதி | - 8.92% |
| மக்கள் | - 32,547,200 (2006) |
| மொத்த உற்பத்தி | - 1.077 டிரில்லியன் அமெரிக்க டொலர் |
| நாணயம் | - கனடா டொலர் |



பிரதமர்
ஜஸ்டின் டுரோன்டோ



பத்து மாகாணங்களையும் மூன்று ஆட்சி நிலப் பகுதிகளையும் கொண்ட மாபெரும் நிலப் பரப்பைக் கொண்ட நாடு, கனடா. உலக அளவில் இரண்டாவது மிகப் பெரிய நாடாக அது அடையாளம் காணப் படுகிறது.

வட அமெரிக்கா கண்டத்தில் அமைந்துள்ள கனடா 'அமைதியான நாடு' என்ற பெயரைப் பெற்றுள்ளது. அதேபோல, அகதிகளை அன்போடு அரவணைக்கும் நாடு என்ற சிறப்புப் பெயரும் அதற்கு உண்டு. இலங்கையில் இடம்பெற்ற யுத் தத்தின்போதும் சிரியாவில் இடம்பெறும் கொடூரமான தாக்குதல்களின் போதும் அதிகமான அகதிகள் கனடாவில் புகலிடம் பெற்றனர்.

வடக்கே வட முனையும் கிழக்கே அட்லாண்டிக் பெருங்கடலும் தெற்கே அமெரிக்காவும் மேற்கே பசுபிக் பெருங்கடலும் கனடாவின் எல்லைகளாக அமைந்துள்ளன.

மதம் - கனடா கிறிஸ்தவ நாடாக அடையாளப் படுத்தப்பட்ட போதும் சமூக வாழ்வில் சமயம் முக்கியத்துவம் பெறுவதில்லை. 17% கனடா மக்கள் நாஸ்திகர்களாகும்.

விளையாட்டு - பனி ஹொக்கி மற்றும் லக்ரோஸ் ஆகிய இரு தேசிய விளையாட்டுக்களை கனடா கொண்டுள்ளது. பனி ஹொக்கி விளையாட்டில் கனடா வீரர்கள் யாராலும் வெல்லப்படாத ஜாம்பவான்களாகவே உலா வருகின்றனர்.

உற்பத்தி கனடாவில் அமைந்துள்ள கியூபெக் மாகாணம் உலகின் ஆறாவது மிகப் பெரிய விமான உற்பத்தி நிலையமாகும். அதேபோல, அதிநவீன கார்களும் கனடாவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புத்தாக்க சிந்தனை – Creativity

*ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)*
BA, Dip.in Counseling (NISD), PGD in Psychology

கற்காலம் முதல் தற்காலம் வரையிலான மனித நாகரிகத்தின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைந்த விடயம் படைப்பாற்றல் **(Creativity)** மற்றும் புத்தாக்க சிந்தனை எனலாம். தமது வாழ்வின் நாளாந்த சவால்களுக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள வித்தியாசமாகச் சிந்திக்கத் தலைப்பட்டபோதே புதிய கண்டுபிடிப்புகள் உதயமாகின.

இதன் விளைவாக ஆரம்பத்தில் கால்நடையாகவும் பின்னர் கழுதை, குதிரை, ஒட்டகங்களிலும் பயணம் செய்த மனிதன் இன்று ஆகாய விமானங்களிலும் அதிசொகுசு வாகனங்களிலும் பயணிக்கின்றான். புறாக்கள் மூலம் செய்திகளைப் பரிமாறிக் கொண்ட மனிதன் இன்று ஈமெயில் என்றும் வட்ஸ்அப் என்றும் நவீன முறைகளில் தமது செய்திகளைப் பரிமாறிக் கொள்கின்றான். இவ்வாறு, இன்றுள்ள வளர்ச்சிகள் அனைத்தும் புத்தகாக்க சிந்தனையின் விளைவுகளே.

**புத்தாக்க சிந்தனை என்றால் என்ன?**

பிரச்சினைகள் அல்லது இக்கட்டான சந்தர்ப்ப சூழ்நிலைகளை வழமைக்கு மாற்றமான பல தீர்வுகளைத் தரக் கூடிய நோக்கில் பார்க்கும் விதமாகும்.

அதாவது, குறிப்பிட்ட பிரச்சினைக்கு வழமையான, நடைமுறையில் உள்ள தீர்வை முன்வைக்காமல் வழமைக்கு மாற்றமான வித்தியாசமான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் சிந்திப்பதே புத்தாக்க சிந்தனை எனலாம்.

புத்தாக்க சிந்தனையானது:

- ❖ சவால்களுக்கு முகங்கொடுக்க ஊக்குவிக்கிறது.
- ❖ தெளிவில்லாத, சிக்கல்வாய்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தேடும் இயலுமையை விருத்தி செய்கிறது.
- ❖ பல கோணங்களில் ஒரு விடயத்தை நோக்க மாணவர்களுக்கு உதவி செய்கிறது.
- ❖ புதிய கண்டுபிடிப்புகளுக்கு ஊக்கமளிக்கிறது.
- ❖ சுதந்திரமான கற்றலைத் தூண்டுகிறது.
- ❖ கற்பனை வாய்ந்தது.
- ❖ சாத்தியமான பல தீர்வுகளை உருவாக்கக் கூடியது.
- ❖ பரந்துபட்டது.
- ❖ விரிவானது.

படிக்கின்ற காலங்களில் மாணவர்கள் இவ்வாறு சிந்திப்பார்களாயின், கற்றலுக்கு இலகுவாக அமையும் புதிய கண்டுபிடிப்புக்களையும் அல்லது கண்டுபிடிப்புகளுக்கான சிந்தனைகளையும் முன்வைக்கலாம். வாழ்க்கையும் அர்த்தமுள்ளதாக மாறும்.

**புத்தாக்க சிந்தனைக்கும் எமது மூளையின் அமைப்புக்கும் என்ன சம்பந்தம்?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ மூளையின் அமைப்பு

புத்தாக்க சிந்தனையில் மூளையின் அமைப்பும் தாக்கம் செலுத்துகிறது. நாம் புதுப் படைப்பாளர்களாக, புத்தாக்க சிந்தனையாளர்களாக இருப்பதற்கான வழிமுறைகளைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், முதலில் மூளை எவ்வாறு தொழிற்படுகிறது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

உயர் தரமான ஸ்கேனிங் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி கடந்த சில வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞான ஆய்வுகள், மூளையின் அமைப்பு மற்றும் அதன் தொழிற்பாடு பற்றிய விடயங்களை உண்மைப்படுத்தியுள்ளது.

இலகுவான முறையில் விளக்கினால் எமது மூளை இரண்டு அரைக் கோளங்களைக் கொண்டுள்ளது. இவ்விரண்டும் கோர்பஸ் கல்லோசம் **(Corpus Callosum)** எனும் நரம்புத் திசுக்களால் இணைக்கப்பட்டுள்ளன. சில விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் இந்நரம்புத் திசுக்களால் இணைக்கப்படாமல் தனித்தனியாக இருக்கும் நிலையில் பிறக்கும் குழந்தைகளும் உள்ளன. இவ்வாறு, நரம்புத் திசுக்கள் இணைக்கப்படாத மூளைகளைக் கொண்டவர்களின் மூலம் செயற்பாடுகள் எவ்வாறு இடம்பெறுகின்றன? அது மூளையின் எப்பகுதியால் நிகழத்தப்பட்டுள்ளது? என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

இந்த அடிப்படையில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் முடிவில் தெரிய வருவதாவது, உடலின் அரைவாசிப் பகுதியானது அதற்கு எதிர்ப் பக்கமாகவுள்ள மூளையின் அரைவாசிப் பகுதியால் கட்டுப்படுத்தப்படுகின்றது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இன்னும் தெளிவாகச் சொன்னால், எமது உடலின் வலது பக்கமாக உள்ள உறுப்புக்கள் அனைத்தும் மூளையின் இடது பக்க அரைக் கோளத்தினாலும், உடலின் இடது பக்கமாக உள்ள உறுப்புக்கள் அனைத்தும் மூளையின் வலது பக்கத்தாலும் கட்டுப்படுத்தப்படுகின்றன.

❖ இடது, வலது பக்க மூளையின் தொழிற்பாடுகள்


வலது கைப் பழக்கமுள்ளவர்களின் வலது பக்க உணர்வுகள் (Senses) மற்றும் அசைவுகள் என்பற்றுடன்

- ❖ பேசுதல்
- ❖ வாசித்தல்
- ❖ கணிதம்
- ❖ பகுப்பாய்வுச் சிந்தனை
- ❖ வரிசை முறையிலான சிந்தனை
- ❖ மொழியாக்கம்
- ❖ கடந்தகால விடயங்களை மீட்டுதல்
- ❖ பெயர்களை ஞாபகத்தில் வைத்து மீட்டுதல்
- ❖ இலக்கணம்
- ❖ விஞ்ஞானம்
- ❖ நேரம் பற்றிய விழிப்புணர்வு போன்றவற்றைக் கட்டுப்படுத்துகின்றன.

வலது பக்க மூளையானது இடது கைப் பழக்கமுள்ளவர்களின் உணர்வுகள் (Senses) மற்றும் அசைவுகள் என்பவற்றுடன்

- ❖ புத்தாக்கம்
- ❖ வெளியிலுள்ள பொருட்களுக்கும் அதன் வடிவத்துக்குமுள்ள தொடர்பை விளக்குதல்
- ❖ கற்பனை
- ❖ இசையுடன் தொடர்பான விடயங்கள்
- ❖ கலையுடன் தொடர்பான விடயங்கள் போன்றவற்றைக் கட்டுப்படுத்துகின்றன.

இதிலிருந்து தொகுத்து நோக்கும்போது, எமது இடது பக்க மூளையானது வாக்கியச் செயன்முறையுடனும் வலது பக்க மூளையானது படங்களுடன் தொடர்பான செயன்முறையுடனும் தொடர்புபடுகின்றன. புத்தாக்கத்துடன் தொடர்பான





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலது மூளையால் உருவாக்கப்படும் புதிய சிந்தனைகளை தர்க்க சிந்தனையுடன் தொடர்பான இடது பக்க மூளை பகுப்பாய்வுக்கு உட்படுத்துகின்றது என்பதை ஆய்வுகள் மேலும் குறிப்பிடுகின்றன.

இதனால், வலது பக்க மூளையால் உருவாக்கப்படும் நிறைய சிந்தனைகள் இடது பக்க மூளையால் வடிகட்டப்பட்டு அப்புறப்படுத்தப்படுகின்றன. இந்த வகையில் இடது பக்க மூளை வலது பக்க மூளையைக் கட்டுப்படுத்துகிறது எனலாம். இதற்குக் காரணம் பல வருடங்கள் நாம் இடது பக்க மூளையினால் கட்டுப்படுத்தப்பட்டு வந்தமையே எனலாம்.

முடிவாக புத்தாக்க சிந்தனையுடன் வலது பக்க மூளை தொடர்புபடுகின்றது எனக் குறிப்பிடலாம். அதேநேரம், இடது பக்க மூளை இவ்வாறான புதிய சிந்தனைகளை முளையிலேயே கிள்ளி எறிந்து விடுகின்றன என்பதையும் அறிய முடிகின்றது.

எம்மில் பெரும்பாலானோர் உடலின் வலது பக்கத்தை அதிகம் பயன்படுத்துபவர்கள் என்பதை நாம் அறிவோம். எம்மில் புத்தாக்க சிந்தனைகள் துளிர் விடும்போது எமது இடது பக்க மூளை எங்களை அறியாமலேயே அழித்து விடுகின்றது என்ற உண்மையை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

எனவே, புதிது புதிதாகச் சிந்தித்து நாளைய உலகின் சாதனை வீரர்களாக மாற விரும்பினால் இடது பக்க மூளையின் ஆதிக்கத்தைச் சற்று அடக்கி வலது பக்க மூளையின் செயற்பாட்டை அதிகரிக்க வேண்டும். தெளிவாகச் சொன்னால் வலது கையால் எழுதுபவர்கள் இடது கையினாலும் எழுதும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

**புத்தாக்கத்துக்கான தடைகள்**

புத்தாக்கங்களை வெளிக்கொணர்வதிலுள்ள மிக முக்கிய தடை எமக்குள்ளிருக்கும் பயமே. பின்வரும் விடயங்களால் அந்தப் பயம் ஏற்படலாம்:

❖ தவறு விடுதல்
❖ ஒரு விடயத்தை முட்டாள்தனமாகப் பார்த்தல்
❖ விமர்சிக்கப்படுதல்
❖ தனிமையாக இருத்தல்
❖ சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டவராக இருத்தல்
❖ பிறரின் தொந்தரவு

தவிர, பின்வரும் விடயங்களும் பயம் ஏற்படுவதற்குக் காரணமாக அமையலாம்

❖ இடது பக்க மூளையின் ஆதிக்கம்
❖ இயைந்து செல்லாத குறிக்கோள்கள்
❖ விரோதம், பகைமை, எதிர்ப்பு

இவ்வாறான காரணங்களால் புதிய சிந்தனைகளை, கருத்துக்களைக் கொண்டு வருவதற்கு நாம் தயங்குகின்றோம். ஒரு கூட்டத்தில் குறித்த ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என்ன வழி என்று வினவும்போது எங்களில் பெரும்பாலானோர் அதற்குத் தீர்வுகளை முன்வைப்பதில்லை. காரணம், ஏதாவது கருத்தைச் சொன்னால் எம்மை முட்டாளாகப் பார்ப்பார்கள் என்ற பயம். அத்துடன், எமது இடது பக்க மூளையின் ஆதிக்கமும் காணப்படுகிறது. ஒரு சிந்தனை உதயமாகும்போதே இடது பக்க மூளை அதைத் தடுத்து விடுகிறது.

எனவே, எமக்கு முன்னாலுள்ள தடைகளைக் களைந்து, மூளையின் வலது பக்கச் செயன்முறைகளுள் ஒன்றான புத்தாக்க சிந்தனை மற்றும் திறனை அதிகரித்து நாம் நாளாந்தம் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் இக்கட்டான சூழ்நிலைகளை சிறந்த முறையில் கையாளும் இயலுமையைப் பெற முயற்சிக்க வேண்டும். அந்த வகையில் அடுத்த இதழில்


1. புத்தாக்க சிந்தனையும் மாணவர்களும்
2. புத்தாக்க சிந்தனை மற்றும் செயன்முறைக்கான நுட்பங்கள்

போன்ற விடயங்களுடன் சந்திப்போம், இன்ஷா அல்லாஹ்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தரம் 6-11
தொடர் : 17

## தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

எம்.எப்.எம். பாஹிம் B.A, PGDE (Merit),RICTP,MEd
(ஆசிரிய ஆலோசகர்)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்
கணினி யுகம் சஞ்சிகையின் ஆசிரியர்

# கணினியினை முகாமைத்துவம் செய்தல்

## பாடம் 11



கணினி நாம் பயன்படுத்தும் மிக முக்கிய உபகரணமாகும். இவ்வுபகரணத்தில் எமக்குத் தேவையான அனைத்து தகவல்களையும் நாம் சேமித்திருப்போம். மேலும், எமது பணிகளை சிறப்பாக, விரைவாக செய்வதற்கு எமக்கு இலகுவில் பயன்படுத்தக் கூடிய பொருத்தமான இடங்களில் இதனை நாம் வைத்திருப்போம். அதேநேரம், இதன் பயன்பாடு பிரச்சினைகள் இன்றி நீடிப்பதற்காக இதனை உரிய முறையில் பராமரித்திருப்போம். இவ்வாறு, மிக கரிசனையுடன் பயன்படுத்தும் கணினிகளின் முகாமைத்துவம் பற்றியும் நாம் தெரிந்திருத்தல் பொருத்தமானதாகும்.

கணினி முகாமைத்துவம்

*01.* செயற்பாட்டு முகாமை

*02.* நினைவு முகாமை

*03.* சாதனங்களின் முகாமை

*04.* கோப்புகளின் முகாமை

*05.* பாதுகாப்பு முகாமை

**செயற்பாட்டு முகாமை**

நாம் கணினியின் உதவியுடன் பல்வேறு செயற்பாடுகளை செய்து வருகின்றோம். உதாரணமாக: கணினியின் உதவியோடு ஒரு கடிதத்தை அச்சிடுவதை நினைவிற் கொள்ளுங்கள். உண்மையில் அச்சிடுவது மிகவும் சிறிய காரியமாக எமக்குத் தோற்றமளித்தாலும் கணினி இச்செயற் பாட்டைச் செய்வதற்கு பல்வேறு மிகச் சிறிய செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. கணினி இச்செயற்பாடுகளை மத்திய செயலாக்க அலகின் மூலம் முகாமை செய்து இறுதிப் பெறுபேற்றைப் பெறுவதற்காக வாய்ப்பளிக்கின்றது.

**நினைவு முகாமை**

கணினியில் பணிகளை மேற்கொள்கின்ற போதே கணினி அச்செயற்பாடுகளை நினைவிற் கொள்ள ஆரம்பிக்கின்றது. கணினியில் தற்காலிக நினைவகத் தினூடாக தகவல்களை குறுகிய நேரத்திற்கு நினைவிற் கொள்கின்றது. பயனரின் தேவைக்கு ஏற்ப நீண்ட காலத்திற்கு தகவல்கள் நினைவிற் கொள்ள வேண்டு மாயின் இரண்டாம் தர நினைவகங்களில் சேமித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்க முடியும். இவ்வாறு நினைவை முகாமை செய்வதற்கு மத்திய செயலாக்க அலகு பெரிதும் வாய்ப்பளிக்கின்றது.


**சாதனங்களின் முகாமை**

கணினியின் பாவனைக்கு அத்தியாவசியமாக இன்று பல உதவி உபகரணங்கள் பயன்படுத்தப்படு கின்றன. இவற்றில் நீண்டநாள் பயன்பாடு அதன் முகாமைத்துவத்தில் தங்கியுள்ளது. குறிப்பிட்ட ஓர் உபகரணத்தை கணினியில் பொருத்தினால் அது தொழிற்படுவதற்கு இயக்கிகள் (Drivers) அவசியப்படுகின்றன. இவ்வகையான இயக்கிகளை யும் செயற்பாட்டு முறைமையையும் கணினியின் மத்திய அலகு முகாமை செய்கின்றது.

**கோப்புகளின் முகாமை**

கணினியின் கோப்புகளை முகாமை செய்தல் என்பது கணினியில் தகவல்களைப் பெறுவதற்கு இலகுவாக வைப்பது என்பதாகும். கணினியில் கோப்புக்களை முகாமை செய்வதற்காக பின்வரும் ஒழுங்குகள் பேணப்படல் வேண்டும்:

1. தேவையற்ற கோப்புகளை அழித்தல்





2. புதிய கோப்புகளை உருவாக்குதலும் அவற்றை பொருத்தமான இடத்தில் வைத்தலும்
3. பைல்களிலும் கோப்புகளிலும் உரிய பெயர்களை இடுதல்

**பாதுகாப்பு முகாமை**

கணினி பாதுகாப்பு தொடர்பான பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும் என்பது நாம் அறிந்ததே. குறிப்பாக, வைரஸ் பிரச்சினைகள் கணினிகளை பெரிதும் ஆட்டிப் படைக்கின்ற பிரச்சினை என்று கூறினால் அது மிகையாகாது. எனவே, கணினியின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு கணினி வைரஸ்களுக்கு எதிரான மென்பொருட்களை பொருத்திக் கொள்வது கட்டாயமானதாகும்.

# Apple கணினியின் வரலாற்றிலிருந்து...



*1976 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி (40 வருடங்களுக்கு முன்னர்) ஸ்டீவ் ஜொப்ஸ், ஸ்டீவ் வொஸ்னியர் என்பவர்களால் அப்பிள் நிறுவனம் அமெரிக் காவில் பதிவு செய்யப்பட்டு உருவாக்கப்பட்டது.* அந்நிறு வனத்தின் பெயர் Apple என வைத்ததற்கான கார ணத்தை அப்போதிருந்த ஊடகவியலாளர்கள் அறிய ஆசைப்பட்டு வினவினர். கணினி விஞ்ஞானத்தின் தந்தை அலன் Apple பழம் ஒன்றில் நஞ்சூட்டி தனது உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவத்தை ஞாபகப்படுத்துமுகமாகவா அல்லது ஐசக் நியூற்றனின் Apple பழத்தின் அடியாய் தோன்றிய புவியீர்ப்பு விசை பற்றிய கொள்கையை நினைவூட்டுமுகமாகவா என வினவியபோது அதற்கான பதில் வியப்பாய் இருந்தது. அதாவது, அப்போது பிரபல நிறுவனமாக இருந்த Atary என்ற நிறுவனத்திற்கு முன்னால் Telephone Directory இல் Apple நிறுவனத்தின் பெயர் இடம்பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே அப்பெயரை இட்டதாக அவர்கள் கூறினர்.

Apple நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட "Apple I" என்ற கணினி உண்மையிலேயே தாய்ப் பலகை மாத்திரமே. வொஸ்னியர் மற்றும் றொனால்ட் வயன் என்பவர்களால் உருவாக்கப்பட்ட இத்தாய்ப் பலகையை கொள்வனவு செய்தவர்கள் அடுத்த பாகங்களைக் கொள்வனவு செய்து பொருத்தியே பயன்படுத்தும் நிலை இருந்தது. இவ்வாறு உருவாக் கப்பட்ட தாய்ப்பலகைகளின் எண்ணிக்கை 200 மாத்திரமேயாகும். பின்னர் 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் "Apple II" என்ற கணினி உருவாக்கப்பட்டது. இது முழுமையான கணினியாக இருந்தது. இது உலகில் பிரபல்யமான கணினியாக மாறியது. இதன் விற்பனை மூலம் இந்நிறுவனம் நூறு அமெரிக்க டொலர்களை இலாபமாகப் பெற்றது.

## Apple-I கணினி

*1983 ஆம் ஆண்டிற்கு முன்னர் பயன்படுத்தப்பட்ட* கணினிகளில் சுட்டி (Mouse) பயன்படுத்தப்பட வில்லை.

**38ஆம் பக்கம் பார்க்க...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வ. முஹம்மது நபீல்

# இந்தக் கல்வி எதற்காக...?

புதிய கல்வி வருடம் புன்னகையுடன் தனது ஆட்டத்தை ஆரம்பித்துள்ளது. நாட்கள் நகரத் துவங்கியுள்ளன. புதிய பாடங்களை கற்கிறோம்; பயிற்சி நூல்களில் பதிகின்றோம்; பரீட்சைகளில் வெற்றியடைகின்றோம். அடுத்த வருடம் இன்னொரு வகுப்பறைக்குள் நுழைய போகின்றோம்.

இவ்வாறு எமது இளமைக் காலத்தில் பெரும்பாலான பகுதி கல்வி வாழ்விற்குள்ளேயே கழிந்து விடுகின்றது. ஆறு வயதில் எண்ணற்ற, இணையற்ற பல அற்புத கனவுகளுடன் பாலர் பள்ளியில் காலடி எடுத்து வைக்கும் எமது மிகப் பெறுமதியான இளமைக் காலம் முழுவதும் இந்தக் கல்விக் கடலிலேயே கரைந்து விடுகின்றன.

- எமது இளமைக் காலப் பொழுதுகள்
- அருமை பெற்றோரின் இணையற்ற தியாகம்
- ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு
- சமூக சேவையாளர்களின் ஒத்துழைப்பு
- அரசின் முதலீடும் திட்டமிடலும்

என மிகப் பெறுமதியான திட்டமிடல்களும் அர்ப்பணங்களும் எம் ஒவ்வொருவரின் கல்விக்கு பின்னாலும் இருக்கின்றன.

சரி, இப்போது எம் மத்தியில் ஒரு கேள்வி எழுகின்றது:

இவ்வளவு கஷ்டப்பட்டு, இத்தனை பேர் தியாகங்களைச் செய்து இந்தக் கல்வியை கசடற கற்பது எதற்காக? கல்வி கற்பவர்கள், கற்றவர்களின் இலக்கு யாது? ஏதாவது தொழிலில் சேர்ந்து கைகள் நிறைய சம்பாதித்து கண் குளிர்ச்சியாக குடும்பத்தைப் பெற மாத்திரமா? அல்லது அதிநாகரிக உடைக்குள் புகுந்து சொகுசு வாகனத்தில் இந்த பரந்த வீதிகளில் உலா வரவா?

இல்லையில்லை...!

கல்வி கற்பதன் நோக்கங்கள் இவை மாத்திரமல்ல... கல்வியின் நோக்கங்கள் மகத்தானவை, அளப்பரியவை, உயர்ந்தவை, ஒப்பற்றவை, அற்புதமானவை, அசத்தலானவை.

**கல்வியின் இலக்குகள்**

1. நீதி
2. மானுட நேசம்
3. ஒழுக்கம், பண்பாடு
4. வாழ்வில் வெற்றி
5. இறைவனுடனான தொடர்பு

**நீதி**

இந்த உலகில் நீதியை நிலைநாட்டல் கல்வியின் முதலாவது இலக்காக அமைய வேண்டும். இந்த உலகம் கண்ணீரில் தத்தளிக்க வேண்டுமா? அல்லது புன்னகை எனும் வைர கிரீடத்தை சுமந்து கொள்ள வேண்டுமா? என்பதை நீதியே தீர்மானிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி என்பது தவறு செய்தவர்களை குற்றவாளிக் கூண்டில் ஏற்றி விசாரிப்பது மாத்திரமல்ல. அப்பாவிகளை அநீதியில் இருந்து காப்பாற்ற வேண்டும். இந்த உலகின் அனைத்து வளங்களும் சமமாக பகிரப்பட வேண்டும். மனித உழைப்பை சுரண்டுவது தடுக்கப்பட வேண்டும். ஒட்டுமொத்த உலகும் நீதியால் நிரம்பும்போது இங்கு அவலங்கள், அநியாயங்கள் நிகழாது.

## மானுட நேசம்

எமது கல்வி எமக்கு மானுட நேசத்தை கற்றுத் தர வேண்டும். அதாவது, நாம் கற்கும் கல்வி எமக்கு இந்த உலகையும் மனிதர்களையும் நேசிக்க கற்றுத் தர வேண்டும்.

உதாரணமாக: இந்த உலகில் எல்லோருமே ஏக இறைவனின் படைப்புக்கள் என்பதை தாம் கற்கும் போது அனைத்து மனிதர்களும் சமமானவர்களே என்பதையும் மனிதனின் உடல் அமைப்பைக் கேலி செய்வது இறைவனின் ஆற்றலை குறை சொல்வதாகவே அமையும் என்பதையும் அறிந்து கொள்கிறோம். இதனால் அனைத்து மனிதர்களுக்கும் சமமான அன்பை வழங்க தலைப்படுகின்றோம்.

கல்வியின் இலக்குகளை சரியாகப் புரிந்து கொள்ளாத காரணத்தினால்தான் கல்வியில் தேர்ச்சிடையந்த ஒரு சிலரே அணுகுண்டைப் பயன்படுத்தி இலட்சம் பேரைக் கொன்றார்கள்; விஷவாயு கூடங்களை நிறுவினார்கள்; தங்கள் நாடு மட்டுமே சுபிட்சமாக இருக்க வேண்டும் என்ற அற்ப சுயநலத்தினால் எதிர் நாட்டு அப்பாவி குழந்தைகளையும் கொன்று குவித்தார்கள்.

ஆகவே, கல்வியின் இறுதி எல்லை மானுட நேசமாக இருக்க வேண்டுமே தவிர, மானுட வெறுப்பாக அமைந்துவிடக் கூடாது.

## பண்பாடுகள்

மனித வாழ்வின் சிறப்பம்சங்களை பட்டியல் படுத்தினால் அதில் முதலில் அமைவது ஒழுக்கப் பண்பாடுகளாகும். நாம் கற்கும் கல்வி எமது பண்பாடுகளில் வெளிப்பட வேண்டும்.

ஒரு காலத்தில் ஒப்பற்ற உலக நாகரிகங்கள் என எல்லோராலும் போற்றிப் புகழப்பட்ட உலக சாம்ராஜ்யங்கள் இன்று இருந்த இடமும் தெரியாமல் அழிந்து போகக் காரணம் அவற்றின் ஒழுக்க வீழ்ச்சியும் பண்பாட்டு சிதைவுகளும்தான்.

எமது கல்வி அடுத்தவர் எம்மை முன்மாதிரியாக போற்ற வழி செய்ய வேண்டுமே தவிர, எமது மோசமான பண்பாடுகளால் மற்றவரை எம்மை விட்டு விரண்டோடச் செய்து விடக் கூடாது.

## வாழ்வில் வெற்றி

கல்வியின் முதன்மையான இலக்குகளில் ஒன்று மனிதனை தனது வாழ்வில் வெற்றியாளனாக உலா வரச் செய்தலாகும். எமது கல்வி எமது சிந்தனைகளை மாற்ற வேண்டும். அந்த சிந்தனைகள் எமது வாழ்வை வெற்றியாக்கித் தரும்.

கருவிகள் எம் வாழ்வில் இலகுவாக்க கண்டு பிடிக்கப்பட்டதைப் போன்று, விதிகளும் சூத்திரங்களும் நியதிகளை எளிமையாக்க உருவாகியதைப் போன்று கல்வியும் எம்மை வெற்றியாளர்களாக்க உருவாக்கப்பட்டுள்ளது. வாழ்வின் வெற்றி எனப்படுவது பெரும் கண்டுபிடிப்பாளராகவோ, சாதனையாளராகவோ வலம் வருவது மாத்திரமல்ல. எமது வாழ்வின் சின்னச் சின்ன விடயங்களை வெற்றிகரமாக மாற்றுவதற்கும் அந்தக் கல்வி துணை புரிய வேண்டும்.

எத்தனை நாள்தான் ஐரோப்பிய மேதாவிகளின் வரலாறுகளையும் சாதனைகளையும் நாம் மனனம் செய்து கொண்டிருப்பது. இந்த உலகம் எம்மை திரும்பிப் பார்க்க வேண்டாமா? எமது சாதனைகளையும் இந்த உலகு பாட வேண்டாமா? எமது வாழ்க்கையும் நாளைய பாடநூலில் ஓர் அத்தியாயமாக இடம்பெற வேண்டாமா?

கல்வி, சாதனையை காதலிப்பவர்களை உருவாக்க விரும்புகின்றது, நீங்கள் தயாரா?

## இறைவனுடனான தொடர்பு

கல்வியின் நோக்கங்களில் தலையாயது இறைவனுடனான தொடர்பு. நாம் எந்த விடயத்தை ஆராய புகுந்தாலும் அதன் இறுதி முடிவு இறைவனின் அற்புத ஆற்றல்களையோ அல்லது அளவற்ற அன்பையோ எமக்குப் புரிய வைப்பதாகவே அமையும்.

சில நாஸ்திகர்களின் பார்வையில் வேண்டுமானால் விஞ்ஞானம் என்பது இறைவனுடைய இருப்புக்கு எதிராக உருவாக்கப்பட்ட ஒன்றாக இருக்கலாம். ஆனால், ஒவ்வொரு விஞ்ஞான வித்தையின் முடிவாகவும் தீர்க்க முடியாத மர்மங்களின் தீர்வாகவும் இறைவனே உள்ளான்.

இந்தக் கல்வி எம்மை இறைவனை நோக்கியே கொண்டு செல்கிறது. கல்வியை அரைகுறை இன்றி முழுமையாக கற்றுக் கொண்டால் இறைவனை, எமது அன்பாளனை மிக பூரணமாக அறிந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**விரைவு - உயர்வு - துணிவு**



# பார்வை அற்றவர்களுக்கான 20 - 20 உலகக் கோப்பை


பார்வையற்றவர்களுக்கான 20-20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் ஜனவரி 31 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி வரை நடைபெறுகின்றன.

இந்தியாவில் நடைபெறுகின்ற இந்தப் போட்டியில் இந்தியா, பாகிஸ்தான், அவுஸ் திரேலியா, மேற்கிந்திய தீவுகள், இங்கிலாந்து, இலங்கை, நியூஸிலாந்து, பங்களாதேஷ் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகள் பங்குபற்றுகின்றன.

இதன் முதல் போட்டி டெல்லியில் நடைபெற வுள்ளது. இதில் மேற்கிந்திய தீவுகள் அணியுடன் இந்திய அணி மோதுகின்றது.

நடப்பு சம்பியனான இந்திய அணி, கடந்த 2012 இல் நடந்த இறுதிப் போட்டியில் பாகிஸ்தானை வென்று கிண்ணத்தைக் கைப்பற்றியமை குறிப் பிடத்தக்கதாகும்.





❖ கிரிக்கெட் பந்தின் நிறை **150-163 கிராம்**

❖ உதைப்பந்தின் நிறை **390- 450 கிராம்**

# ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த நான்காவது இலங்கையர்




ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த நான்காவது இலங்கையர் என்ற பெருமையை இலங்கை அணித் தலைவர் ஏஞ்சலோ மேத்யுஸ் தனதாக்கிக் கொண்டுள்ளார்.

இவர் கடந்த மாதம் ஜொகனர்ஸ் பேர்க்கில் இடம்பெற்ற இலங்கை மற்றும் தென் ஆபிரிக்க அணிகளுக்கு இடையிலான இரண்டாவது இருபதுக்கு இருபது போட்டியிலே இந்த சாதனையை தனதாக்கிக் கொண்டுள்ளார். ஏலவே இலங்கை அணியில் டி.எம். டில்சான் 1889 ஓட்டங்கள், மஹேல ஜயவர்தன 1493 ஓட்டங்கள், குமார் சங்ககார 1382 ஓட்டங்களைப் பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சுதந்திரக் கிண்ணம் போட்டித் தொடர்

இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 'சுதந்திரக் கிண்ணம்' ஒருநாள் கிரிக்கெட் தொடரை நடத்துவதற்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனம் ஏற்பாடு செய்து வருகின்றது. எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்து 70 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடவுள்ள நிலையிலே 'சுதந்திரக் கிண்ணம்' என்ற பெயரில் ஒருநாள் கிரிக்கெட் தொடரை நடத்த இலங்கை கிரிக்கெட் நிறுவனம் ஏற்பாடு செய்து வருகின்றது. இத்தொடர் குறிப்பாக, 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதமளவில் நடத்தப்படுவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கால்பந்து பற்றிய சுவையான தகவல்கள்

கால்பந்து விளையாட்டு முதன் முதலாக சீனா நாட்டில் கி.மு. 476 காலகட்டத்தில் தோன்றியது.

உலகம் முழுவதும் உள்ள பெரும்பான்மையான மக்களால் அதிகம் விரும்பி பார்க்கப்படும் விளையாட்டு கால்பந்து ஆகும். உலகக் கோப்பை கால்பந்து போட்டியை மட்டும் 100 கோடி மக்கள் தொலைக்காட்சி மூலமாக காண்கின்றனர்.

1942 ஆம் ஆண்டு நடைபெற்ற கால்பந்து போட்டியில் பிரான்ஸ் அணியைச் சேர்ந்த ஸ்டிஃபன் ஸ்டானிஸ் ஒரே ஆட்டத்தில் 16 கோல்களை அடித்தார்.

1998 ஆம் ஆண்டில் உருகுவே நாட்டைச் சேர்ந்த ரிச்சர்டோ ஒலிவெரா 2.8 செக்கன்களில் அதிவேகமான கோல் அடித்தார்.

ஒவ்வொரு கால்பந்து போட்டியிலும் ஒவ்வொரு வீரரும் சராசரியாக 9.65 கி.மீ. தூரம் ஓடுகின்றனர்.

1930 மற்றும் 1950 ஆம் ஆண்டைத் தவிர ஐரோப்பிய கண்டத்தைச் சேர்ந்த ஏதேனும் ஒரு நாடு ஒவ்வோர் உலகக் கோப்பை கால்பந்து இறுதிப் போட்டி வரை முன்னேறி உள்ளது.

கால்பந்து வீரர் ரொனால்டினோ ஒரே ஆட்டத்தில் அவர் மட்டும் 23 கோல்களை அடித்து உலகப் புகழ் பெற்றார்.

120 வருட கால்பந்து வரலாற்றில் கால்பந்தின் சுற்றளவு 28 இன்ச் (inch) ஆகும். இதில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

முதன் முதலாக 1937 ஆம் வருடம் கால் பந்து போட்டி நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டது.

## சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் சிறந்த வீரராக ரொனால்டோ





சுவிற்ஸர்லாந்து தலைநகர் சூரிச்சில் இடம்பெற்ற சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் கால்பந்தாட்ட சிறப்பு விருதுகளில், உலகத்தின் சிறந்த வீரராக கிறிஸ்டியானோ ரொனால்டோ பெயரிடப்பட்டார்.

மொத்த வாக்குகளில், 34.54 சதவீதமான வாக்குகளை கிறிஸ்டியானோ ரொனால்டோ பெற்றதுடன், 26.42 சதவீதமான வாக்குகளை லியனல் மெஸ்ஸி பெற்றதுடன், 7.53 சதவீதமான வாக்குகளை அந்தோனி கிறிஸ்மன் பெற்றார்.

கடந்தாண்டு யூரோ கிண்ணத்தையும் சம்பியன்ஸ் லீக்கையும் வென்ற கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கான அங்கிகாரமாக இவ்விருது நோக்கப்படுகிறது. கடந்த டிசெம்பரில், பலோன் டோர் விருதையும் கிறிஸ்டியானோ ரொனால்டோ வென்றிருந்தார். கடந்தாண்டில் 44 போட்டிகளில் பங்குபற்றி 42 கோல்களைப் பெற்ற ரொனால்டோ, 14 கோல்கள் பெறப்படுவதற்கான பந்துப் பரிமாற்றங்களையும் வழங்கியிருந்தார்.

## ஒலிம்பிக் பற்றிய சில தகவல்கள்



- 1894 ஆம் ஆண்டு ஒலிம்பிக் சம்மேளனம் உருவாக்கப்பட்டது.
- 1908 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் பெண்கள் கலந்து கொண்டனர்.
- 1920 ஆம் ஆண்டு ஒலிம்பிக் கொடியேற்றம் வழக்கத்திற்கு வந்தது.
- 1936 ஆம் ஆண்டு ஒலிம்பிக் தீபம் ஏற்றும் வழக்கம் உருவாக்கப்பட்டது.
- 1968 ஆம் ஆண்டு ஒலிம்பிக் சின்னம் உருவாக்கப்பட்டது.
- 1996 ஆம் ஆண்டு ஒலிம்பிக் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது.



சிறுவர் பகுதி
நூலகம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைச் சரம்

## மடமைத்தனம்

தாயின் கருவில்
ஜனித்து
ஜனனமாகி
மரணமாகி
மண்ணின் கருவில்
துணிக்கும் வரை...

எலும்ப, நரம்ப, சதை
தோல் மூடிய
உடற்கட்டு
கொண்ட மனிதன்
வாழ்வ...

பணத்தாசையினால்
உழைப்பிலே உயராது
வட்டியின் குட்டியில்
வயிறு வளர்த்து
பண மூட்டையும்
பாவத்தின் சேமிப்ப

வக்கிரமமும் இச்சையும்
தகாத உறவு கொண்டு
உடம்பினில்
கொடிய கிருமியோடு...

பிறர் வியர்வையின்
வரவின் சேமிப்பை
வாரிச் சுருட்டிக் கொண்டு
தரித்திரத்தோடு...

உள்ளம் மூடி
உதடுரைக்கும்
பொய்யினால்
குடிகொண்ட
பஞ்சம் பட்டினியோடு...

பொன்னாசையும்
மண்ணாசையும்
நெஞ்சேற்றி
மண்ணறை மறந்து
மமதையோடு...

பொதுநலமில்லா
சுயநலவாதியாகவும்
புறம் தனை பேசி
பகைமை மூட்டி
பாவியாகவும்
மனிதா வாழ்வது
மடமைத்தனம்

பாத்திமா பர்ஹா பாரூக்
தரம் - 10
பலாந்தை முஸ்லிம் வி.
அகலவத்தை

## ஆசான்கள்

அறிவுக்கடலாய்
இப்பாரினிலே
ஒளிபரப்பிக் கொண்டிருக்கும்
ஆசான்களே!
இக்கவி வரிகளை
உமக்காக சமர்ப்பிக்கிறேன்

இன்றைய கனவுகள்
நாளைய நிஜங்கள்
என கோஷம் எழுப்பும்
மாணாக்கர்களை
அறிஞர்களாக மாற்ற
உம் பணியோ அளப்பரியது

நாளைய தலைவர்களை
இன்றே உருவாக்கத் துடிக்கும்
எம் ஆசான்களின் சிறப்பை
இவ்வையகமே போற்றுகின்றது

நேரம் காலம் பாராது
அயராது உழைக்கிறார்கள்
எம் சிட்டுகளை சிற்பிகளாக
செதுக்குவதற்கு

உலக மாந்தர்களுக்கெல்லாம்
வழிகாட்ட வந்த வான்மறை கூட
ஆசான்களின் மகிமையை
பறைசாற்றாமல் இல்லை

ஜசூர் ஜஸ்ரா யாஸ்மின்
ஸஹ்ரா வளாகம்

## ஒன்று மட்டுமே போதும்

போராட்டம் எதுக்கு
இனி போர்க்களம்
தேவையில்லை
தேசம் அன்று
இரவுகளிலும் கண் விழித்து
இரத்தக் கண்ணீரே ஓடிய
ஆறுகளான நாட்கள்
இனி வேண்டாம் நமக்கு
இப்போது செல்கிறேன்...
வேண்டாம் நமக்கு...!
கலவரமும் நிலைவரமும்
மோசமானால் அழியும் நம்
தேசமதே...
வேண்டும் நமக்கு
அவந்திரமான சமாதானம்
ஒன்று மட்டுமே போதும்...

பாத்திமா தைனா
மாறை/கொடபிடிய ஸாதாத் ம.வி.

## பேசும் கவிதை - இல 22



- படம் சொல்லும் சேதிகளை கவிதையாக எழுதியனுப்பலாம்.
- கவிதைகள் பத்து வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.
- எழுதி அனுப்பப்படும் கவிதைகள் கவிதைச் சரத்தில் பிரசுரிக்கப்படுவதுடன், தெரிவு செய்யப்படும் சிறந்த முதல் கவிதைக்கு பரிசாக பெறுமதியான புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
- கவிதைகள் தபாலட்டையில் மாத்திரமே எழுதப்படல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2016 பெப்ரவரி 20**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முதலிடம் பெற்ற கவிதை

### அழியாச் செல்வம்

கல்வி எனும்
அழியாச் செல்வத்தை
பெற எத்தனிக்கும்
சாதனைகள் படைக்க
காத்திருக்கும்
நாளைய உலகை நிர்வகிக்கும்
இளம் பிஞ்சுகளே...!
உங்கள் பணி தொடரட்டும்
இப்புவுலகிலே!

✍ இப்றாஹீம் நஸீர்
மடவளை பஸார்

## பாராட்டுக்குரிய ஏனைய கவிதைகள்

### வாழ வழிகாட்டும் புத்தகம்

அறிவின் இருப்பிடம்
புத்தகம்
நல் ஆக்கத்தின்
பிறப்பிடம் புத்தகம்
சத்தியத்தின் பிறப்பிடம்
புத்தகம்
நம்மை சான்றோராய்
உருவாக்கும் சாதனைக்களம்
இந்த புத்தகம்

✍ ஆர்.எம். அஸ்ரித் அஹமத்
போ/அல் அஸ்ஹர் ம.வி.
கல்லளை

### நாளை நமதே

நாளைய நாளின்
வெற்றியாளர்கள் நாம்
நாளைய உலகின்
அறிவியல் அரசர்கள் நாம்
தரணியில்
தலை நிமிர்ந்து நடப்போம்
தடைகளை அகற்றுவோம்
ஆண்டவனை வணங்குவோம்
உலகை அன்பால் நிரப்புவோம்

✍ பஹத் பாயிஸ்
வெல்லம்பிடிய

### இறைவனே பொருந்திக் கொள்!

காலம் சுருங்கி விட்டது
என்பதனை நிரூபிப்பதற்காகவோ
இராப்பகல் பாராது
இல்மை தேடுகிறாய் ?
அல்லது உன் இலக்குகளை
அடைய வேண்டும்
என்ற பேராவலினாலா...!
இலக்குகள் எவ்வாறாயினும்
உன்னை ஏகன்
பொருந்திக் கொள்ளட்டும்..!

✍ முஷர்ரிபா முஸ்னி
க/மதீனா தேசிய பாடசாலை கண்டி

### வேண்டும் வாழ்வில் வெற்றி

வாழ்வில்
வெற்றி வேண்டும்
வாழ்வில்
வாகை வேண்டும்
வாழ்வில்
ஜெயம் ஆகவேண்டும்
வாழ்வில் வெற்றி என்பது
எம்மைச்சுற்றி வாழ்பவர்களின்
கண்ணீர் துடைப்பதுவே

✍ மில்ஹான் முஹம்மத்
வவுனியா

### அறிவுச் சமூகம்

ஆண்டவனின் முதல்
வார்த்தை வாசிப்பீராக அதையே
உயிர்நாடியாக கொண்டு உலகில்
தலைநிமிரந்து வாழலாம்
கை எழுத்துக்கள் நம்
தலையெழுத்தை மாற்றலாம்

✍ தா. மர்யம்
கல்கமுவ

### அறிவு எனும் ஆறு

அகிலம் எனும்
அரங்கில் அறிவு
எனும் ஆறு அழகானது
அன்பு எனும்
ஆகாயம் மிக நீளமானது
இரண்டும் கலக்கும்போது
இந்த உலகமும்
உன்னதமானது

✍ அரூஸ் யூஸுப்
பம்புனு கம

### கல்விக்கு கரையில்லை

கற்றது கையளவு
கற்காதது கடலளவு
என்றார்கள் சான்றோர்கள்
கற்கும் கல்விக்கு
கரையில்லை
அதில் மூழ்கியவன்
முத்தில்லாமல்
எழுந்ததில்லை...
காலம் கடந்தாலும்
காயங்கள் சேர்ந்தாலும்
கற்கும் கல்வி கைவிட்டதில்லை

✍ எப். ரஹீமா பானு
ஹாதியா வளாகம்

### பௌர்ணமி நீயா..!

புத்தகங்களில் புதைந்து
புத்தியை வளரக்கும்
என் தோழா...
புதிய உலகம் காண நீயும்
தயாரா...?
புதிய பாதைகளில் பயணித்து
பௌர்ணமியாய்
பிரகாசிக்க நீயும் தாயாரா...?

✍ எம். ஆமிர் அத்னான்
கொ/ஸாஹிரா கல்லூரி

### தரமிருந்தும் இடம் பிடிக்கத் தவரியவை

01. எம்.எப். நுஹறா – க/மதீனா தேசிய பாடசாலை, கண்டி
02. எம்.எச். பஹ்மா – அல் ஹிக்மா வித்தியாலயம், தெல்தோட்டை
03. எம்.ஐ.எம். ஹரீஸ் – மாறை/கொடபிடிய ஸாதாத் ம.வி.
04. எப். ஹனா – அல் மதீனா மத்தியக் கல்லூரி, மாஹோ
05. எப். மன்ஹா – அல் மதீனா மத்தியக் கல்லூரி, மாஹோ
06. எஸ்.எப். ரிம்ஸா – அக்குரணை முஸ்லிம் பாலிகா மஹா வித்தியாலயம்
07. எம்.எச். ஷைறா – க/எனசல் கொல்ல மத்திய கல்லூரி, தெல்தோட்டை
08. ஸைன் மர்ஷூக் – புத்தளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2016 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனை படைத்த மாணவச் செல்வங்கள்

## க/ஜாமிஉல் அஸ்ஹர் மத்திய கல்லூரி, உடதளவின்ன


எம்.எம்.பீ. அப்துல்லாஹ் - 171


எம்.எம். ருஸைக் 169


எம்.ஆர்.எம். இன்ஸாப் - 168


எம்.என்.எம். தல்ஹா 167


எம்.ஏ.எம். ரிம்ஸான் 166


எம்.வை.எப். அம்னா 166


எம்.ஐ.எம். அல்தாப் 163


எம்.ஜே.எப். இல்மா 159


எப்.ஏ. சிம்லா 157


எம்.ஐ.எப். இல்மா 157


டீ.ஆர். ஆகில் அஹமட் - 158


எம்.எப்.எம். அக்மல் 156

## நிக/கல்பானவ முஸ்லிம் வித்தியாலயம், மொன்னேக்குளம்


எம்.எப். ஹஸ்பா 180


ஐ. முஸ்னி அஹமட் 162

## நிக/அபுக்காகம முஸ்லிம் மகா வித்தியாலயம், மொன்னேக்குளம்


எம்.டீ. ஹனா 175


எம்.சி. அம்னா 155

**31ஆம் பக்கத் தொடர்...**

*1983* ஆண்டு உருவாக்கப்பட்ட "Apple Lisa' என்ற கணினியில் சுட்டி பொருத்தப்பட்டு பயன் படுத்தப்பட்டது. *1984* ஆண்டு "Apple Macintosh' என்ற கணினி சந்தைக்கு வந்தது. இவ்வாறு குறுகிய காலத்தில் கணினிகளின் தயாரிப்பும் அதன் விற் பனையும் உலக பிரபல்யத்தைக் கொடுத்த போதிலும் நிறுவனத்தில் உட்பூசல்கள் ஏற்பட ஆரம்பித்தன. எனவே, ஸ்டீவ் ஜொப்ஸ் நிறுவனத்தில் இருந்து விலகிச் சென்றார். பின்னர் அவர் நெக்ஸ்ட் (Next) என்ற ஒரு நிறுவனத்தை உருவாக்கி அதில் தனது முன்னேற்றம் கண்டார். பின்னர் Apple நிறுவனம் மீண்டும் ஸ்டீவ் ஜொப்ஸின் கைக்கு வந்தது. எனவே, Next நிறுவனத்ததை Apple நிறுவனம் விலைக்கு வாங்கி Apple என்ற பெயரில் *1966* தொடக்கம் செயற்பட ஆரம்பித்தது.

### Apple Macintosh கணினி

இன்று சந்தையில் Apple நிறுவனத்தின் பல்வேறு உற்பத்திகள் காணப்படுகின்றன. iMac, iPod, iBook, Power Mac, MacMini, iPone என உலகின் தொழிநுட்ப சந்தையில் அவை அசைக்க முடியாத இடம்பிடித்துள்ளன. இவ்வுற்பத்திகள் அதன் தரத்தின் காரணமாகவும் அழகிய வடிவமைப்பு காரணமாகவும் பயனர்களின் நம்பிக்கையை வென்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம் காய்க்கும் மரம்

இந்தியாவின் மால்வா பிரதேசத்தில் சிறியதொரு ராஜ்யம் இருந்தது. அதன் அரசன் பெரும் கொடை வள்ளலாக விளங்கினான். அவனுடைய மாளிகையிலிருந்து எந்த யாசகனும் வெறுங்கையோடு திரும்ப மாட்டான். ஒரு முறை மாளிகை வாசலுக்கு ஒரு துறவி வந்தார். ''துறவிக்கு ஏதாவது தாருங்கள்'' என்று அவர் குரல் கொடுத்தார்.

அரசன் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, ''தங்கள் விருப்பத்தை வெளியிடுங்கள். உடனே அரச கஜானாவிலிருந்து அந்தத் தொகை உங்கள் பையினுள் போடப்படும்'' என்று கூறினார்.

துறவி அதனை ஏற்றுக் கொள்ள மறுத்தார். ''பொதுமக்களுடைய பணம் அவர்களுக்காகவே செலவழிக்கப்பட வேண்டும். தாங்கள் தர விரும்பினால், கஷ்டப்பட்டு உழைத்த பணத்திலிருந்து தாருங்கள்'' என்றார்.

அரசன் துறவியின் மனோ விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக அரச உடைகளைக் களைந்து, ஒரு சாதாரண உழைப்பாளியின் உடைகளை அணிந்து கொண்டு வேலை தேடிச் சென்றார். அங்குமிங்குமாக அலைந்த பிறகு ஒரு கொல்லனிடம் வேலை கிடைத்தது. நாள் முழுக்க நெருப்பாகச் சிவந்த இரும்பைத் தட்டினார். மாலை வரும்போது கொல்லன் அன்றைய நாளைக்குரிய கூலியாக நாலு காசு கொடுத்தான். தனது வாழ்க்கையிலே அரசன் ஒருபோதும் இவ்வளவு கடினமான வேலை செய்ததில்லை. எனவே, அவர் மிகவும் களைத்து இளைத்துப் போனார். தனது சுய உழைப்பினால் ஏதோ கொஞ்சம் சம்பாதித்ததையிட்டு மகிழ்ச்சியுற்றார்.

பின்னர் துறவியின் உறைவிடத்தைத் தேடிக் கொண்டு சென்று, தனது உடல் உழைப்பினால் சம்பாதித்த பணத்தை அவர் முன்னால் வைத்தார். வைராக்கியம் படைத்த துறவிக்குப் பணம்தான் எதற்கு? அவர் அரசனின் முன்னிலையிலேயே அந்தப் பணத்தை வெளியே வீசியெறிந்தார். அரசன் இதைக் கண்டு ஆச்சரியப்பட்டதோடு துக்கம் அடைந்தார்.

சில தினங்கள் கழித்து அந்த இடத்தில் ஒரு மரம் வளர்ந்து வந்தது. இன்னும் சிறிது காலத்துக்குப் பிறகு அதில் நாணயத்தாள்களும் சில்லறைப் பணமும் பழங்கள் போன்று காய்க்கலாயின. இதைக் கண்ட மக்கள் அதிலிருந்து பணம் பறித்துச் சென்றனர். காலை முதல் மாலை வரை மக்கள் அதிலிருந்து பணம் பிடுங்கிக் கொண்டு செல்வதை வழமையாகச் செய்து வந்தனர். ஆனால், ஆச்சரியத்துக்குரிய விஷயம் என்னவென்றால், அதில் பணம் ஒருபோதும் குறைவடையாதிருந்ததுதான்.

இந்த அதிசயமான மரத்தைப் பற்றி அரசனும் கேள்விப்பட்டான். அரசனிடம் யாசகம் கேட்டு வருவோரின் எண்ணிக்கை பெருமளவு குறைந்து போனது. மக்கள் அவரிடம் யாசகம் கேட்டு அவருக்கு முன்னால் வரவே தயங்கலாயினர். இரு கைகளாலும் பணத்தை வாரி வழங்கவும், தனக்கு எத்தகைய பண நெருக்கடி ஏற்படாதிருக்கவும், தான் மிகப் பெரிய கொடை வள்ளல் என்ற பெயர் உலகமெல்லாம் பரவவும், பணம் காய்க்கும் மரம் தன்னுடைய தோட்டத்திலேயே இருக்க வேண்டும் என்று அரசர் யோசித்தார்.

அரசன் ஆரவாரத்தோடு அந்த இடத்துக்குச் சென்று; மரத்தை வேரோடு பிடுங்கும்படி தனது ஊழியர்களுக்கு உத்தரவிட்டார். ஊழியர்கள் பெரு முயற்சி செய்தும் மரம் அசையக்கூட இல்லை. இதற்குள் துறவியும் அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார். அவர் அரசனை நோக்கி, ''அரசே, இதைப் பிடுங்க முடியாது. ஏனென்றால், நீங்கள் வியர்வை சிந்தி ஒரு நாள் உழைத்த பணத்திலிருந்து முளைத்த மரம். நான் தங்கள் முன்னிலையில் வீசியெறிந்த பணத்திலிருந்து முளைத்த மரம் இது. இதனுடைய வேர்கள் பாதாளம் வரை சென்றிருக்கின்றன. இது எப்போதும் மனிதர்களுடைய தேவையை நிறைவேற்றிக் கொண்டிருக்கும். இதில் எந்தக் குறைவும் ஏற்பட மாட்டாது.''

அரசன் துறவிக்கு மரியாதை செலுத்தியவாறு அங்கிருந்து திரும்பிச் சென்றார். கடுமையான உழைப்பினால் சம்பாதித்த பணத்தில்தான் அபிவிருத்தி (பரகத்) இருக்கிறது.

ஸீயெம்மே அமீன்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 45 நிமிடம்

வினாப்பத்திரம் I



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

1. முலையூட்டி, நீந்துதல், நீர்ச் சூழல் ஆகிய மூன்று சொற்களுக்கும் பொருந்தக் கூடியது?

i. தவளை    ii. திமிங்கிலம்
iii. மனிதன்


2. முதலில் தரப்பட்ட கருத்திற்கு பொருந்தாத கருத்தினைத் தெரிவு செய்க.

i. மின்னல் மின்னும் - மழை பெய்யும்

ii. வரட்சி ஏற்படும் - பிராணிகள் அழியும்

iii. காற்று வீசும் - பூக்கள் மலரும்

**3 ஆம் 4 ஆம் வினாக்களுக்கு படங்களின் உதவியுடன் விடை தருக.**




3. வீட்டில் இயற்கையாகக் காணப்படும் பிராணிகளைக் கொண்ட விடையினை தெரிவு செய்க.

i. A,C    ii. G,E    iii. E,D

4. மனிதனது பொருளாதார தேவைக்காக வளர்க்கப்படும் பிராணிகளைக் கொண்ட விடையினைத் தெரிவு செய்க.

i. B,C    ii. A,I    iii. G,F

5. ரகுவின் தாய் கலா ஆவார், தந்தை பரத் ஆவார், கமலேஷ் கலாவின் சகோதரன் ஆகும். கமலேஷின் மகன் சிவாவுக்கும் ரகு என்ன உறவு முறை?

i. மாமா    ii. மைத்துனன்
iii. பெரியப்பா

6. 5 நண்பர்கள் தங்களுக்கிடையில் வாழ்த்து மடல்களை பரிமாறிக் கொள்வதற்காக 25 வாழ்த்து மடல்களை வாங்கினார்கள் எனின், பரிமாறிய பின் எஞ்சியுள்ள வாழ்த்து மடல்களின் எண்ணிக்கை?

i. 20    ii. 5    ii. 0


7. நீளம் பாய்தல் போட்டியொன்றில் குமார் 150 cm, வினித் 165 cm, தனுஷ் 115 cm தூரங்களையும் பாய்ந்து முடித்தனர் எனின், வெற்றி பெற்றவர்களின் பெயர்களின் ஒழுங்கு முறையே

i. தனுஷ், குமார், வினித்

ii. வினித், குமார், தனுஷ்

iii. குமார், வினித், தனுஷ்

8. நிழற்றப்படாத பகுதியினை பின்னமாகத் தருக.



i. 4/8

ii. 9/16


iii. 7/16

9. குமார் வரிசையொன்றில் முன்னால் இருந்து பார்க்கும்போது 12 ஆவதும் பின்னால் இருந்து பார்க்கும்போது 7 ஆவதும் நிற்பின் வரிசையில் மொத்தமாக இருப்போரின் எண்ணிக்கை யாது?

i. 18    ii. 19    iii. 20

**கோலத்தை இனங்கண்டு வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

10. 



i.    ii.    iii.

11. →   ↑↑   ⇶

i. ⬱    ii. ↓↓↓↓    iii. ↑↑↑↑

**வேறுபட்ட சொற்கூட்டத்தைக் கொண்ட அடைப்பைத் தெரிவு செய்க.**

12.

| i. | ii. | iii. |
|---|---|---|
| சிங்கம்<br>புலி<br>கரடி | தவளை<br>தேரை<br>சலமந்தரா | புறா<br>காகம்<br>வெளவால் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13.

| | | |
|---|---|---|
| பெற்றோல் | கலப்பை | சூரியன் |
| டீசல் | அரிவாள் | மேகம் |
| கராடி | மண்வெட்டி | நட்சத்திரம் |
| i. | ii. | iii. |

14. 8 → 4 ↓ 32 → 44  7 → 3 ↓ 21 → 31

6 → 8 ↓ 48 → ....

i. 62
ii. 56
iii. 40

15. இரு எண்களைக் கூட்டும்போது விடை 40 ஆகும். அவ்விரு எண்களுக்கிடையிலான வித்தியாசம் 10 ஆகும். அவ்விரு எண்களும் யாவை?

i. 18, 22  ii. 15, 25  iii. 22, 12

16. பிழையான கோவையை தெரிவு செய்க.

i. 20 x 5 + 10 = 110

ii. 25 x 4 + 10 = 110

iii. 30 x 3 + 40 = 110

**பழமொழிகளின் கருத்தை விபரிக்கும் விடையைத் தெரிவு செய்க.**

17. இரக்கப் போனாலும் சிறக்கப் போ

i. எல்லை கடந்த ஆசை துன்பத்தைத் தரும்

ii. கோபம் வருமிடத்து நிதானம் குறைந்து விடும்

iii. வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்


18. அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய்


i. கோபம் ஒருவனுக்குத் தீமையை ஏற்படுத்தும்


ii. பயமுள்ளவனை எல்லாம் பயமுறுத்தும்


iii. எண்ணியபடி எதுவும் நடப்பதில்லை

**19, 20 வினாக்களில் தரப்பட்ட இரண்டு உருக்களையும் ஒன்றின் மீது ஒன்றாக வைக்கும்போது கிடைக்கும் உருவைத் தெரிக.**

19. 



20. 




21. 1 தொடக்கம் 10 வரையான இரட்டை எண்களின் கூட்டுத்தொகை?

i. 30  ii. 20  iii. 31

22. என்னிடமும் தங்கையிடமும் உள்ள பணம் ரூபா 200,00 ஆகும். நான் தங்கைக்கு ரூ 20.00 ஐக் கொடுத்தால் எம் இருவரிடமும் உள்ள பணம் சமமாகக் காணப்படும். நான் பணம் கொடுக்கும் முன் தங்கையிடம் இருந்த பணம்?

i. ரூபா. 80.00  ii. ரூ. 120.00
iii. ரூ. 100.00

23. உருவில் உள்ள கோணம் பற்றிய சரியான கூற்று?



i. இது செங்கோணத்தை விட சிறியது

ii. இது ஒரு செங்கோணமாகும்


iii. இது செங்கோணத்தை விட பெரியது


24. ஒரு பொருளின் விலை INPP/ZP எனும் ஆங்கில எழுத்துக்களால் குறிக்கப்பட்டிருந்தது. அதன்படி அப்பொருளின் விலையாக இருக்கக் கூடியது.

i. 7220/50  ii. 3672/81  iii. 7200/60

25. கப்பல் - கடல் எனின், பேருந்து?

i. தெரு  ii. பயணிகள்  iii. சாரதி

26. 



27. கடிகாரம் ஒன்றின் நேரம் 3 மணியாகும்போது நிமிட முள் வடக்குத் திசையைக் காட்டியது எனின், மணித்தியால முள் காட்டும் திசை எது?

i. மேற்கு  ii. கிழக்கு

iii. தெற்கு

**44ஆம் பக்கம் பார்க்க...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேரம் 1 மணி 15 நிமிடம்

வினாப்பத்திரம் II



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

01. பின்வரும் பாடலை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு பாடலில் இருந்து விடை தருக.

நீல வானில் அம்புலி தோன்றிட
நீள வாவியில் மலர்கள் மலர்ந்திட
நீயும் நானும் கண்டு களித்திட
உலா வந்ததே வட்ட நிலா

1. பாடலில் இடம்பெற்ற இரண்டு அடை மொழிகள் தருக.
2. பாடலில் இடம்பெற்ற தன்மை ஒருமைச் சொல் ஒன்று தருக.
3. பன்மைச் சொற்களைத் தருக.
   i. நீயும்.......... ii. நானும்..............
4. இப்பாடல் நாளின் எப்பொழுது பற்றி கூறுகின்றது?
5. 'உலா வந்ததே வட்ட நிலா' என்பதனால் கருதப்படுவது யாது?
6. 'அம்புலி' என்பதன் ஒத்த சொல் யாது?

02. பின்வரும் வாக்கியங்களை பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

1. நான் பாடல் பாடினேன்
2. நீ பாடத்தை நன்றாகப் படி

03. பின்வரும் பழமொழிகளின் கருத்தினைத் தருக.

1. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.
2. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு

04. பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிவு செய்க.

1. கமாலும் விமலும் ஒரே வகுப்பில் ஒன்றாக (படிக்கின்றான்/படிக்கின்றார்கள்)
2. மகனது வெற்றியினை கேள்வியுற்ற தாயின் மனம் மிகவும் (மகிழ்ச்சியடைந்தது/மகிழ்ச்சியடைந்தாள்)

05. பின்வரும் வாக்கியங்கள் ஆங்கிலத்தில் சொல்லப்படும் விதத்தினை ஆங்கில எழுத்துக்களில் எழுதுங்கள்.

1. தம்பி தயவு செய்து இங்கே வா.
2. வாருங்கள் இப்பொழுது விளையாடுவோம்.

06. பின்வரும் ஆங்கில சொற்களின் தமிழ்க் கருத்தினை எழுதுங்கள்.

1. **Pumbkin**
2. **Grand Father**

07. பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினை தமிழ் எழுத்துக் களில் எழுதுங்கள்.

1. எனக்கு தண்ணீர் கொஞ்சம் தாருங்கள்.
2. தங்கை வருவாளா?


08. பின்வரும் சிங்களச் சொற்களின் தமிழ்க் கருத்தினை எழுதுங்கள்.

1. விசிபஹய்
2. சரசவிய

09. 'நான் கண்ட வீதி விபத்து' எனும் தலைப்பில் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் மூன்று வாக்கியங்கள் எழுதுக.


10. விடை தருக.

1. 0.32 என்பதனை பின்னத்தில் தருக.
2. 6 Kg நிறையுடைய அரிசியை 250 g நிறையுடைய எத்தனை பைக்கற்றுகளில் அடைக்கலாம்?
3. 5 மாம்பழங்களின் விலை ரூ 24.00 எனின், 25 மாம்பழங்களில் விலை யாது?
4. 49 cm2 பரப்பளவுடைய சதுரம் ஒன்றின் சுற்றளவு யாது?
5. A வகுப்பில் 39 மாணவர்களுக்கும் B வகுப்பில் 37 மாணவர்களும் உள்ளனர் எனின், மொத்தமாக இரு வகுப்புகளிலும் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?
6. கொழும்பிலிருந்து கண்டிக்கு மு.ப. 6.15 க்கு புறப்பட்ட பேருந்து 3 மணித்தியாலம் 35 நிமிடங்களின் பின்னர் பயணத்தினை நிறைவு செய்தது எனின், பயணம் முடிவடைந்த நேரம் யாது?
7. ஒரேயளவான 6 cm நீளமும் 2 cm அகலமும் உள்ள 4 செவ்வக வடிவ அட்டையைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இவ்வுருவின் சுற்றளவு யாது?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8.  நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவைக் காண்க.


9. ஆறாயிரத்து ஆறு என்பதை இலக்கங்களில் தருக.

10. 8 $\ell$ கொள்ளக் கூடிய பாத்திரத்தில் 3500 $m\ell$ நீர் இருந்தது. அது முற்றாக நிரம்ப வேண்டும் எனின், 250 $m\ell$ கொள்ளக் கூடிய பாத்திரம் ஒன்றால் எத்தனை தடவைகள் ஊற்ற வேண்டும்?


11. பெட்டியொன்றில் 16 முட்டைகள் உள்ளன. மற்றொரு பெட்டியில் 10 முட்டைகள் உள்ளன. இரண்டு பெட்டிகளிலுமுள்ள முட்டைகள் சமமாக வேண்டும் எனின், முதலாவது பெட்டியிலிருந்து எடுத்து இரண்டாவது பெட்டிக்குப் போட வேண்டிய முட்டைகள் எத்தனை?

12. சமபக்க முக்கோணி ஒன்றை புள்ளிக் கோட்டின் வழியே மடித்து உருவாக்கப்படும் திண்ம உருவின்

1. விளிம்புகள் எத்தனை?
2. உச்சிகள் எத்தனை?



13. இவ்வுருவிலுள்ள முக்கோணிகள் எத்தனை?




14. கடையில் இருந்த மாம்பழங்களில் 3/5 பங்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. 40 பழங்கள் எஞ்சியிருந்தன எனின், விற்பனை செய்யப்பட்ட பழங்கள் எத்தனை?

15. ஒரு நிறத்தாளில் 3 வாழ்த்து மடல்களைச் செய்யலாம். 14 வாழ்த்து மடல்கள் செய்வதற்குத் தேவையான நிறத்தாள்கள் எத்தனை?

11. கீழே காணப்படும் வினாக்களுக்கான சரியான விடையின் கீழ் கோடிடுக.

1. சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத சாதனம் எது?

i. முச்சக்கர வண்டி ii. தொடருந்து
iii. ஈருருளி iv. ஆகாய விமானம்

2. அதிகளவு வித்துக்கள் காணப்படும் பழம்?

i. மா ii. கொய்யா
iii. தென்னை iv. அப்பிள்

3. தேசப்படத்தில் ஆறுகளைக் குறிக்க பயன்படும் நிறம்?

i. பச்சை ii. மஞ்சள்
iii. நீலம் iv. வெள்ளை

4. பூக்கள் வாடாமல் இருக்க பயன்படுத்தப்படும் பொருள்?

i. பெனடோல் ii. ஸ்பிரிட்
iii. டிஸ்பிரின் iv. அஸ்பிரின்

5. பின்வருவனவற்றுள் பற்சில்லு காணப்படும் பொருள்?

i. தொலைக்காட்சி
ii. கணினி
iii. ஒற்றைச் சில்லு வண்டி
iv. கடிகாரம்

6. பின்வருவனவற்றுள் இலத்திரனியல் சாதனமாக அமையக் கூடியது?

i. சுவரொட்டி ii. சஞ்சிகைகள்
iii. தொலைக்காட்சி iv. பெயர்ப்பலகை

7. ஒரு குழுவில் ஏழு பேர் இடம்பெறும் விளையாட்டாக அமைவது?

i. காற்பந்து ii. கரப்பந்து
iii. வலைப்பந்து iv. கிரிக்கெட்

8. உணவுக்காக பயன்படுத்தப்படும் பூ வகை அல்லாதது?

i. வாழைப்பூ ii. முருங்கைப்பூ
iii. மாதுளம்பூ iv. அகத்திப்பூ

9. உணவைப் பேணும் நவீன முறை?

i. குளிரூட்டல் ii. புகையூட்டல்
iii. உலர்த்துதல் iv. வெள்ளமிடல்

10. வானவில்லில் உள்ள நிறம் அல்லாதது?

i. சிவப்பு ii. நீலம்
iii. வெள்ளை iv. ஊதா

11. விவசாயிகளுக்கு நன்மை செய்யும் பிராணி

i. நத்தை ii. புறா
iii. தும்பி iv. காகம்

12. பின்வருவனவற்றுள் செம்படவன் பயன்படுத்தும் உபகரணம் யாது?

i. கரப்பு ii. அரிவாள்
iii. மூலைமட்டம் iv. சாந்தகப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
சிறுவர் பகுதி
பொது நூலகம்

13. இலை மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரம் பின்வருவனவற்றுள் எது?

i. வேம்பு ii. கறிவேப்பிலை
iii. மிளகாய் iv. பெப்ரோமியா

14. பின்வருவனவற்றுள் வடமத்திய மாகாணத்திற்குள் அடங்கும் நகரம் எது?

i. யாழ்ப்பாணம் ii. பொலன்னறுவை
iii. மட்டக்களப்பு iv. அம்பாறை

15. பசவகுளத்தைக் கட்டுவித்த மன்னன்?

i. தாதுசேனன் ii. காசியப்பன்
iii. பண்டுகாபயன் iv. மகாசேனன்

16. இயற்கை அனர்த்தங்களில் ஒன்றாக அமையாதது?

i. மின்சாரம் தாக்குதல் ii. நில நடுக்கம்
iii. மின்னல் தாக்குதல் iv. சூறாவளி

17. உணவை மெல்லாது விழுங்கும் பிராணி?

i. மாடு ii. மான்
iii. பல்லி iv. சிங்கம்

18. சூடான பொருட்களை எடுப்பதற்கு பயன்படும் உபகரணம்?

i. குறடு ii. மின் துறப்பணம்
iii. இடுக்கி iv. துளை கருவி

19. பின்வரும் கருவிகளுள் துளை கருவி எது?

i. கித்தார் ii. புல்லாங்குழல்
iii. மேளம் iv. சிம்பிள்

20. காற்றின் மூலம் பரம்பலடையும் வித்து?

i. முருங்கை ii. பலா
iii. மாதுளை iv. தென்னை

21. அசுத்த நீரினை பருகுவதால் ஏற்படும் நோய்?

i. டெங்கு ii. மலேரியா
iii. வாந்திபேதி iv. சிக்கன் குன்னியா

**விடைகள்**

01. 1. நீல, நீள 2. நான்
3. i. நீங்களும் ii. நாங்களும்
4. இரவு
5. பவனி வந்தது சந்திரன்
6. சந்திரன்

02. 1. நாங்கள் பாடல் பாடினோம்
2. நீங்கள் பாடத்தை நன்றாக படியுங்கள்

03. 1. புத்தகப் படிப்பினால் எதுவும் ஆகாது.
2. ஒன்று பட்டால் எதையும் சாதிக்கலாம்.

04. 1. படிக்கின்றார்கள்
2. மகிழ்ச்சியடைந்தது

05. 1. Brother, Please come here
2. Come, Let's play

06. 1. பூசணி
2. பாட்டன்

07. 1. மட வதுர சுட்டக் தென்ன
2. நங்கி எனவதா?

08. 1. இருபத்தைந்து
2. பல்கலைக்கழகம்

09. ...........................

10. 1. 25/8
2. 24
3. 120.00
4. 28 cm
5. 76
6. ரு.ப. 9.50
7. 28 cm
8. 18 cm
9. 6006
10. 18 தடவைகள்
11. 3
12. i. 6 ii. 4
13. 6
14. 60
15. 5

11. 1. iii
2. ii
3. iii

4. iv
5. iv
6. iii
7. ii
8. iii
9. i
10. iii
11. iv
12. i
13. iv
14. ii
15. i
16. i
17. iii
18. iii
19. ii
20. i
21. iii

41 ஆம் பக்கத் தொடர்...

**விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | iii | 10. | iii | 19. | ii |
| 2. | iii | 11. | iii | 20. | iii |
| 3. | iii | 12. | iii | 21. | i |
| 4. | ii | 13. | i | 22. | i |
| 5. | ii | 14. | i | 23. | i |
| 6. | ii | 15. | ii | 24. | iii |
| 7. | ii | 16. | iii | 25. | i |
| 8. | i | 17. | iii | 26. | ii |
| 9. | i | 18. | ii | 27. | ii |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எண்ணங்களின் வண்ணங்கள் - 18

புரிசில்களை பெறும் சித்திரங்கள்

## தலைப்பு: எனது புதிய வகுப்பறை...



மிப்லா ஸிம்லா
எம்.எல்.ஏ.ஸீ



எம்.எச்.எப். சஆமா
குளி/மடிகே மிதியாள ம.க
மிதியால




என். பசாம் அஹமட்
நிக/அபுக்காகம மு.ம.வி.
நிக்கவரட்டிய



என். சப்கி அஹமட்
நிக/அபுக்காகம மு.ம.வி.
நிக்கவரட்டிய



எப். ஆதிலா
தாராபுரம்



எம்.எம்.எம். நபீல்
க/காஹிர் மு.வி.



என்.எப். நுஹா
மன்/எருக்கலம்பிட்டி ம.ம.வி.
மன்னார்



உ.எப். அன்சியா
மன்/எருக்கலம்பிட்டி ம.ம.வி.
மன்னார்



ஏ.எப். றிஸா
மன்/எருக்கலம்பிட்டி ம.ம.வி.
மன்னார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவந்துவிட்டது..

## Islamic Book House இன் புதிய வெளியீடுகள்!

### "தரம் ஒன்று முதல் உயர்தரம் வரைக்கான உசாத்துணை நூல்கள்"



**இஸ்லாமிக் புக் ஹவுஸின் புத்தகங்கள்..**

நியாயமான விலைகளில் தரமானவைகள்.

முன் எப்போதும் இல்லாத வகையில் பொருத்தமான, கவர்ச்சியான முன் அட்டைகளைத் தாங்கியவைகள்.

அனுபவம்மிக்க, பிரசித்தி பெற்ற தகுதிவாய்ந்த, ஆசிரியர்களால் எழுதப்பட்டவைகள்.

புதிய பாடத்திட்டத்திற்கு (2016-2017) அமைவாக உருவாக்கப்பட்டவைகள்.

தலை நகரை அடுத்து வாழும் மாணவர்களின் மேம்பாடு, நலன் கருதி இலங்கையில் உள்ள அனைத்து இடங்களிலும் இலகுவாகப் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

www.ibh.lk வலைதளத்தின் ஊடாக Online Order மூலம் புத்தகங்களை பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

தபால் மூலமும் (VPP) பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



**YOU RING! WE BRING!**

**FREE HOME DELIVERY SERVICE**

City Limits Only / Conditions Apply

Designed by Mufariz

For your complete and competitive books & stationery shopping experiences..

**ISLAMIC BOOK HOUSE**

77, Dematagoda, Road, Colombo 09, Sri Lanka.

Tel: 2684851, 2669197, Fax: 0112688102 Hot Line 011 5 925 935

E-Mail ibhinfo77@gmail.com Web: www.ibh.lk